செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு-உ0௧௪. ஆவணி பரல்-௧

செப்டம்பர் 1983

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு ௨0௧௪, ஆவணி பரல்-௬

செப்டம்பர் 1983

செல்வியின் ஐம்பத்தெட்டாம் ஆண்டு

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கச் செய்யும் நோக்கத்துடன், இற்றைக்கு ஐம்பத்தேழு ஆண்டுகட்கு முன்னர் தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகளாரை வழிகாட்டியாகக் கொண்டு துவக்கப்பெற்ற தீந்தமிழ் இலக்கியத் திங்கள் ஏடாம் ''செந்தமிழ்ச் செல்வி'', பல இடர்ப்பாடுகளுக்கிடையில் ஐம்பத்தேழு ஆண்டுகளைக் கடந்து இன்று தனது ஐம்பத்தெட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றாள்.

தனது நீண்ட பயணத்தில் 'செல்வி' ஆற்றிய அருந்தமிழ்ப் பணிகள் மிகப் பல. அப்பயணத்தில் நல்லனவும் அல்லனவுமாக அவள் பெற்ற பட்டறிவுகளும் பல உண்டு. பெரும் புலவர் பலரின் விழாக்களைக் காண நேரிட்டதுபோலவே, பல பெருமக்கள், புலவர்கள் ஆகியோரின் மறைவுகளையும் காண நேரிட்டது. இங்ஙனம் உருண்டோடிய பல நிகழ்ச்சிகளுள், கழக ஆட்சியர், தாமரைச் செல்வர் வ. சுப்பையா அவர்களின் மறைவு தமிழன்பர் நெஞ்சங்களை விட்டு நீங்காத ஒருபெருந்துயர நிகழ்ச்சியாகும்.

மறைந்த ஐயா அவர்களின் அருந்திறல்களை இவ்வேளையில் நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம். கழகத்தின் காவலராகவிருந்து, நூற்பதிப்புத் துறையில் பல புதுமைகளைச் செய்து வந்ததோடு, 'செந்தமிழ்ச் செல்வி' வாயிலாக அவர்கள் ஆற்றிய தொண்டும் பரப்பிய தமிழுணர்வும் என்றும் மறக்கற்பாலனவல்ல. மொழிப்பற்று - சமயப்பற்று - நாட்டுப்பற்று - இனப்பற்று ஆகியனவற்றை வளர்க்கச் செல்வியைக் கருவியாகக் கொண்டதோடு, ஓர் இலக்கிய ஏடு எவ்வண்ணம் அமைதல் வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் செல்வியில், சொல்லாராய்ச்சி, வரலாற்று

ராய்ச்சி, இயல் இசை நாடகக் கலைகட்கு ஆக்கம், அறிவியல், மொழியாக்கம், சமயப்பணி, தேவையானபோது தேவையான அரசியல்பணி என்று இன்ன பிற ஆக்கப் பணிகட்கு இடந்தந்து செல்வியை ஒரு கலைக்களஞ்சியமாகவே நடத்திவந்தார்கள். தமிழகத்தின் ஐம்பதாண்டு வரலாற்று ஏடு என்றும் இதனைக் கூறலாம்.

இத்தகைய அரும்பணிகட்கெல்லாம் செல்வியின் வாயிலாக அடிநாளில் வித்திட்டு வழிகாட்டிய மறைத்திரு மறைமலையடிகளாரையும், இச் செல்வியைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த மணி திருநாவுக்கரசர், அறிஞர் கா. சு. பிள்ளை, அறிஞர் பா. வே. மாணிக்கநாயக்கர், நாவலர் ந. மு. வே. நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசனார், முனைவர் இராசமாணிக்கனார், காழி. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை, மா. வே. நெல்லையப்பர் ஆகியோரையும், பின்னாளில் பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார், சித்தாந்த பண்டிதர் ப. இராமநாதபிள்ளை, மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் போன்றோரையும் ஈண்டு நினைவு கூர்ந்து நன்றி செலுத்தும் கடப்பாடுடையேம்.

இப் புலவர் பெருமக்களைத் தொடர்ந்து புலவர் இளங்குமரனார், அறிவியல் அறிஞர் பி. எல். சாமி, பேராசிரியர் மதிவாணன் ஆகியோரும் மற்றும் நுண்மாண் நுழைபுலமிக்க புலவர்களும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சமயக் கட்டுரைகளையும் செல்விக்கு வழங்கி உதவி வருகின்றனர். இவர்கட்கும் எமது நன்றி என்றும் உரித்தாகும்.

செல்வி தனது ஐம்பத்தெட்டாம் சிலம்பினை ஒலிக்கத் துவங்கியுள்ள இவ்வேளையில் அவ்வொலி கேட்டு மகிழும் நாம், அதே நேரத்தில் இலங்கையில் நமது தமிழினம் கொடுங்கோலாட்சியில் சிக்கிச் சீரழிந்து சித்திரவதைக்காளாகிக்கொண்டிருக்கும் கூக்குரலையும் கேட்டு வேதனைப்படுகிறோம். இவ்விடர்ப்பாட்டினின்று தமிழினத்தைக் காக்கும் பொறுப்பு இனப்பற்றுடைய தமிழர் அனைவர்க்கும் உண்டு என்பதையும் செல்வி உணர்த்தி வருகிறாள்.

அடுத்து, மொழிகாக்கும் பணியில் நாம் மேலும் முனைந்து செயல்பட்டாகவேண்டும். இப்போது தமிழுக்குப் புதிது புதிதாக இடர்ப்பாடுகள் தோன்றியவண்ணமிருக்கின்றன. இதுபற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அத்துறையில் அன்பர்கள் செல்வியின் தனித் தமிழ்த் தொண்டுக்கு மேலும் ஊக்கமும் ஆக்கமும் அளிப்பார்களென நம்புகிறோம்.

இவை அனைத்துக்கும் மேலாகச் செந்தமிழ்ச் செல்வி செழிப்புடனும் வளமுடனும் வாழவேண்டுமாயின், செல்வியைப் படிப்போர் தொகை மிகுதல்வேண்டும். அதற்கேற்ப அன்பர்கள் செல்விக்கு

உறுப்பினராவதோடு மற்றவர்களையும் உறுப்பினராகச் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுதல் நல்லதொரு தமிழ்த்தொண்டாகும். அங்ஙனமே ஆயுள் உறுப்பினர் தொகை பெருகும்வகை காண்டல் சாலப் பயனுடைத்தாகும்.

இதனை வலியுறுத்தும் காரணியம் என்னையோவெனில், இந் நாளில் ஓர் ஏடு நடத்துதல் என்பது எளிதன்று. அதிலும் நம் செல்வி போன்றதோர் இலக்கிய ஏட்டினை, தமிழகத்தைக் கவர்ச்சி கவ்விக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் வளர்த்திடல் மிகமிக இடர் தரும் பணியாகும்.

எனவே, இப்போது செல்விக்கு மிகமிக வேண்டற்பாலது அன்பர்களின் ஆதரவுதான் எனில், அது மிகையன்று. ''ஆதர வுடையான் செய்யும் அல்லவும் நல்லவாகும்; ஆதரவிலாதான் செய்யும் நல்லவும் அல்லவாகும்'' என்னும் தமிழ் வாக்கினை உணர்ந்து அன்பர்கள் தொடர்ந்து தம் ஆதரவினை நல்குவார்களாக.

செல்வியின் செந்தமிழ்ப் பணியினைப் பாராட்டி ஆதரவு நல்கு முகத்தான் திங்கள் தோறும் இருநூறு படிகளை வாங்கித் தமிழன்பர் கட்கு வழங்க முன்வந்திருக்கும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் தார்க்கும் எமது உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

இதுகாறும் செல்விக்குக் கட்டுரைகள் வழங்கியுதவிய அறிஞர் பெருமக்கட்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வ தோடு தொடர்ந்து செல்வியின் ஆக்கத்திற்கு உறுதுணை நல்குமாறும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வாழ்க தமிழ் ! வளர்க செந்தமிழ்ச் செல்வி !

வாழ்த்துகின்றேன்

தன்னை மறந்திருந்த தமிழினத்தின் நிலையுயர
தந்தை மறைமலையார் தந்தார் தமிழியக்கம்
அந்த வழிநின்று அனைத்துலகும் போற்றும்வண்ணம்
முந்தை சிறப்பினையும் முத்தமிழின் மாண்பினையும்
சிந்தை களிக்கும்வண்ணம் செந்தமிழின் செல்வியவள்
சிந்தும் சிலம்பொலியால் செப்பும் திறமறிந்து
எந்தவிதம் அன்னவளை ஏற்றிப் புகழ்வதென்று
சிந்தை கனிந்தெந்தன் செயல்மறந்து வாழ்த்துகின்றேன்.

—த. சி. வே.

திருக்குறளும் கலைச்சொல்லாக்கமும்

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

(சிலம்பு-௫௭, பரல்-௧௧, ௪௭௫ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்குறளில் வழங்கும் சொற்கள், கலைச்சொற்களாகத் திகழும் முறையை முன்னைக் கட்டுரைகளில் கண்டோம். இன்னும் இத்தகு சொற்கள் பலவாதலின் இவ்வளவில் நிறுத்திப், பிறமொழிச் சொற்களுக்குத் தக்க பழஞ்சொற்களாகத் திகழும் சிலவற்றைக் காண்போம்.

முந்நாடி : நாடிகளை நாடி, மருத்துவம் செய்வது தமிழ் மருத்துவத் தனிச் சிறப்பாகும். இந்நாடிகள் மூன்று என்றும், அவை வாதம், பித்தம், சிலேட்டுமம் என்றும் குறிப்பர். வாதம் பித்தம் சிலேட்டுமம் என்பவற்றை முறையே ஊதை, பித்தம், கோழை எனத் தமிழில் கூறுவர். திருவள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டு மருத்துவம் தமிழ்க்கலைச் சொற்களையே கொண்டு நடந்தமையால் அவர்,

> "மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று"

என்றார். இதில் 'வளிமுதலா எண்ணிய மூன்று' என்பது ஊதை, பித்தம், கோழை என்பவற்றையேயாம். ஊதை, 'வளி' எனப் பெற்றது. கோழையை ஐ என்றும் 'ஐயம்' என்றும் கூறுவர். வளி அல்லது ஊதை என்பதும், கோழை அல்லது ஐ என்பதும் வழக்கொழிந்து வாதம் சிலேட்டுமம் என்பவை வழக்கூன்றி விட்டனவாம்.

அறல் : அறல் என்பது அற்றுப்போதல் என்னும் பொருட்டதாம். உணவு செரித்தலைத் திருவள்ளுவர் 'அறல்' என்பார். செரித்தபின் எஞ்சியவை கீழ் இறங்குவதால் செரித்தலை 'இழிவு' என்றும் திருவள்ளுவர் கூறுவார். "உண்டது அறல் இனிது;" "அற்றது அறிந்து;" "அற்ருல் அளவறிந்து" என்றும், "இழிவு அறிந்து உண்பான்" என்றும் இச்சொற்கள் அவரால் ஆளப் பெற்றுள்ளன. ஆனல் அறல், இழிவு என்னும் சொற்கள் ஆட்சியில் வீழ்ந்துபோயின. பிற்காலத்தில் தோன்றிய செரித்தல், செரிப்பு, செரிமானம் என்பவும் அருகிய வழக்காகவே உள்ளன. இவற்றின் இடத்தை 'ஜீரணம்' பற்றிக்கொண்டது 'அஜீரணமும்' மிகுந்துவிட்டது. அம்மட்டோ! அவர் சொல்வதை ஜீரணிக்க முடியவில்லை என்னும் வகையில் ஜீரணவழிப் பொருளும் கிளைத்து விட்டது! அறலும் இழிவும் வழக்குக்கு வரவேண்டிய கலைச் சொற்களாம்.

மறை : மறை என்பது கழுக்கம் ஆகும். நாட்டுப்புற வழக்கில் கழுக்கம் என்பது இன்றும் நடைமுறையில் உள்ளது.

ஆனால், எங்கும் 'இரகசியம்' 'பரமரகசியம்' என்பவை பெரு வழக்காக உள்ளன. கமுக்கம் என்பதைத் திருக்குறள் 'மறை' என்னும் சொல்லால் குறிப்பிடும். 'புறப்படுத்தானும் மறை' 'அருமறை', 'தாம்கேட்டமறை' 'மறையிறந்து', 'மறைபெறல்' என்பவை திருக்குறளாட்சியில் உள்ளவை. மறையும் கமுக்கமும் ஆட்சிப்படுத்த வேண்டியவை. இவற்றுள் கமுக்கம் பாவாணரால் நடைமுறைப்படுத்தப்பெற்றதாம்.

ஆக்கமும் கேடும் : பொருள் ஆவதும் கெடுவதும் கண்கூடு. இதனை வெளிப்படுத்தும் ஆட்சிகள் 'அழிவதும் ஆவதும்', 'கேடும் பெருக்கமும்', 'ஆக்கமும் கேடும்' என்பவை. இத்தகைய இனிய சொல்லாட்சிகள் இருந்தும் இவை போற்றப்பெறுமல் இக்காலத்தில் 'இலாப நஷ்டம்' ஆட்சியில் பயின்றுபோயிற்று.

> "ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
> ஊக்கார் அறிவுடை யார்"

என்று வள்ளுவர் குறித்தும், ஆக்கமும் கருதாராய் முதல் இழக்கும் செய்வினையில் தமிழர் ஊக்கி நிற்பதற்குச் சான்ருயிற்று, 'இலாப நஷ்டம்.'

வழிமுறை : வழிமுறையாவது, வாழையடி வாழையென வருவது. இவ் வழிமுறை,

> "தேரான் பிறனைத் தெளிந்தான் **வழிமுறை**
> தீரா இடும்பை தரும்"

என்று குறளில் வந்துள்ளது. வழிமுறையே அன்றி வழி என்பதும் அதே பொருளைத்தரும் என்பது,

> "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
> வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

என்னும் குறளால் விளங்கும். மரபுவழி, கொடிவழி, கால்வழி, வழிவழி என்றெல்லாம் சொற்கள் இருந்தும் இந்நாளில் பாரம் பரியம், பரம்பரை, சந்ததி என்றெல்லாம் வழக்கூன்றிவிட்டன. 'இராசபாரம்பரியம்' கலிங்கத்துப் பரணி விரிக்கும். சந்ததி, சந்தானமாகிச், 'சந்தான உவமை'யென அணியிலக்கணம் சுட்டும். வழிமுறை முதலியவற்றைத் தமிழ் ஆர்வலர் ஆட்சிக்குக் கொண்டு வந்தால் எளிதாக நிலைத்துவிடும்.

போதுவண்ணல் : குலம், குடி, சமயம், இனம் இன்னபல செயற்கையான் அமைக்கப்பெற்ற அமைப்புகளே. பிறப்பொடு இவை வருவன அல்ல. ஆகலின்; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ருர் வள்ளுவர். இடைக்காலத்தே கிளர்ந்து, இக்காலத்தே புற்றீயலாக வெளிப்பட்டுப் புன்மைக்கு இடமாக்கி வைத்துக்கொண்டிருப்பது சாதிப்பிரிவு. சாதிப்பிரிவு வெறியாகி

வெடிப்பதால், ஏச்சு, பேச்சு, பகை, பாழ், வெட்டு, குத்து எனத் தலைவிரித்தாடவும் ஆயின. கண்டால் தீட்டு, தொட்டால் தீட்டு என்பவர் உடனிருந்து உண்பரோ? உடனிருந்து உண்ணல் என ஒரு கடைப்பிடியைக் கொள்ள அரசு ஆங்காங்குள்ள அலுவலர் பொதுமக்கள் ஆயோரைக் கொண்டு சில்லாண்டுகளின்முன் ஏற்பாடு செய்தது! அதற்கு 'உடனுண்ணல்' என்று பெயர் வைக்க அரசுக்கு ஆர்வமா? அலுவலர்க்கு ஆர்வமா? எவரோ ஒருவர் 'சமபந்தி போஜனம்' என்றார். அவ்வளவுதான்! எங்கெங்கோ 'சமபந்தி போஜனங்கள்' பெயரளவில் நடந்தன! இதற்கு ஒரு தமிழ்ச் சொல் கிட்டவில்லையா? தமிழாக்கச் செயலைத் தமிழறிந்தாரைக் கொண்டு அரசு என்றுதான் தலையிட்டுச் செய்தது?

திருக்குறளில் 'பொதுவுண்ணல்' (1099) சுட்டப்பெறுகிறது. 'பொதுநோக்கும்' உண்டு (528). பொதுமக்கள் புரிந்து கொண்டால் பொதுவுண்ணல் வழக்குக்கு வாராதா? 'பொது வுடைமை'க் கட்சி யமைப்புக்கூட இச் சொல்லாக்கத்தை நழுவவிடலாமா?

உள்வீழ்தல்: ஒரு செல்வர் தம் செல்வத்தை யெல்லாம் இழந்து, பட்டகடனைத் தீர்க்கமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டால் அவர், 'I. P.' தந்துவிட்டார் என்பது வழக்கு. I. P. என்பது 'Insolvency Petition' என்பதன் சுருக்கமாம். இதனைத் 'திவாலா' என்றும், 'மஞ்சள் கடிதம் வாங்குதல்' என்றும் கூறுவது உண்டு. இதற்கு ஏற்றதோர் சொல்லைத் திருவள்ளுவர் தந்துள்ளார். அது, 'உள்வீழ்தல்' என்பதாம்.

> "வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பில் தலைப்பிரிதல் இன்று"

என்பது அது. உள்வீழ்தலாவது, உள்ளது குறைந்துபோதல் என்பதாம்.

அதிர்வு: அதிர்வு என்பது அசைவு, உள்நடுக்கம், விதிர் விதிர்ப்பு முதலிய பலபொருள் தரும் சொல்லாகும். இச்சொல் 'Shake' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பதிலியாகத் தக்கதாம்.

> "எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
> அதிர வருவதோர் நோய்"

என்னும் இடத்தே அதிர்வைச் சொல்கிறார் திருவள்ளுவர்.

இவ்வாறு பலதிறத்தானும் திருக்குறளிலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ள சொற்களால் கலைச் சொற்களை அமைத்துக்கொள்ளல் கூடும். இதுபற்றித் தனியாய்வு மேற்கொள்வார் நயத்தகு கலைச்சொற்களைப் படைத்துக்கொள்ள முடியும் என்பதைச் சுட்டும் அளவில் இத்தொடர் அமைகின்றது.

———

சங்க நூல்களில் ஆலம்

[பி. எல் சாமி, இ. ஆ. ப.]

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள மரங்களில் மிகப் பெரிய மரம் ஆலமரமாகும். இந்த மரம் பல ஆண்டுகள் வாழ்ந்து விழுதுகளை விட்டு மிக அகலமாக வளர்வதாகும். இந்த மரம் நீண்டகாலம் வாழ்ந்து நடுமரத்தை இழந்து விழுதுகளால் தாங்கப்பட்டு வாழும். ஆலமரம் வெகுகாலம் வாழ்வதால் இதைத் தொன்முதாலம் என்று சங்கப்பாடல்கள் கூறியுள்ளன.

''பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல''

—குறுந்தொகை 15-2

''துணைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்க''

—அகநானூறு 251-8

தொன்முதாலம் என்று சொல்வதால் ஆலமரம் நீண்டகாலம் வாழும் தன்மை தெரிகின்றது.

ஆலமரம் பல விழுதுகள் விடுவதுபற்றிப் பல சங்கப்பாடல்கள் குறிப்பிட்டுள்ளன.

'தாதெரு மறுகின் ஆபுறந் தீண்டும்
நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை'

—நற்றிணை 343-4

'வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் அழுங்கல் ஊரே'

—அகநானூறு 70-16

'நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகைப்
புரிசை மூழ்கிய பொரியரை ஆலத்து
ஒருதனி நெடுவீழ் உதைத்த கோடை'

—அகநானூறு 287-7

'மணிவாய்க் காக்கை மாநிறப் பெருங்கிளை
பிணிவீழ் ஆலத் தலங்குசினை யேறிக்
கொடுவில் எயினர் குறும்பிற் கூக்கும்'
—அகநானூறு 319-2

'நெல்லி நீடிய கல்லறைக் கவாஅன்
அத்த ஆலத்து அலந்தலை நெடுவீழ்
தித்திக் குறங்கில் திருந்த உரிஞ' —அகநானூறு 385-9

"நீயே தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே
முழுமுத ருலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது"
—புறநானூறு 58-2

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்" —நாலடியார் 197-1

"கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும் - வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்பும்இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்" —திரிகடுகம் 33-2

ஆலமரம் நடுமரத்தை இழந்தபோதிலும் அதன் விழுதுகள் மரத்தைத் தாங்குவதை ஓர் உவமையாக நாலடியாரும், புறநானூறும் கூறியுள்ளன. அவ்வாறு மரத்தைத் தாங்குவது முதியவர் இறந்தபிறகு பிள்ளைகள் தங்கள் குடும்பத்தைத் தாங்குவதற்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.

ஓர் அரசனின் செங்கோலை அமைச்சன் ஆலம்விழுதுகளைப் போல் தாங்கவேண்டும் என்று திரிகடுகம் குறிப்பிட்டுள்ளது.

புறநானூறு, மலைபடுகடாம் ஆகிய சங்கநூல்கள் ஆலமரத்தைக் 'கோளி ஆலம்' என்று குறிப்பிட்டுள்ளன.

'நீயே தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே
முழுமுத ருலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது'
—புறம் 58-2

"நின்னுரை செல்லு மாயின் மற்று
முன்னூர்ப் பழுனிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளும்" —புறம் 254-7

"குறியறிந் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளி
ஞுடுகா ணனந்தலை மென்மெல வகன்மின்"
—மலைபடுகடாம்-268

நிகண்டுகளில் 'கோளி' என்பதற்குப் பூவாமல் காய்க்கும் மரம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. ஆலமரத்தின் பூ வெளியே தெரியாது. இதன் பூக்களில் மகரந்தச் சேர்க்கை பூச்சிகளினுல் நடைபெறுகின்றது. இந்த முறையான மகரந்தச்சேர்க்கையை Cryptogamy என்று செடிநூலில் சொல்லுவர். பூக்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவது வெளிப்படையாகத்தெரிவதில்லை. ஆனல் பூவாமல் காய்க்கும் என்று கூறியது சரியில்லை. பூக்கள் வெளியில் தெரியாமல் இருப்பதால் இவ்வாறு கூறப்பட்டது. பூவின் அரும்பும் காய்போலவே இருக்கும். எனவேதான் இத்தகைய கருத்து தோன்றிற்று.

ஆலமரத்தின் கனிகளைப்பற்றியும் சங்கப்பாடல்கள் கூறுகின்றன:

'புதுக்கலத் தன்ன கனிய வாலம்
போகில்தனைத் தடுக்கும் வேனி லருஞ்சுரம்
தண்ணிய வினிய வாக
எம்மொடுஞ் சென்மோ விடலை நீயே' —ஐங் 303-1

'கடவு ளாலத்துத் தடவுச்சினைப் பல்பழம்
நெருந லுண்டன மென்னுது பின்னும்
செலவா ஞுவே கலிகொள் புள்ளினம்' —புறம் 199-1

'நின்னுரை செல்லு மாயின் மற்று
முன்னூர்ப் பழுவிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளும்' —புறம் 254-7

ஆலமரத்தின் கனி புதுப்பானை போன்று இருந்ததாக ஐங்குறுநூற்றுப் பாடலில் (303) கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். ஆலமரத்தின் பல கனிகளை விரும்பியுண்பதற்குப் பறவைகள் நாடி வருவது பல சங்கப் பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது:

'கடவு ளாலத்துத் தடவுச் சினைப் பல்பழம்
நெருந லுண்டன மென்னுது பின்னும்
செலவா ஞுவே கலிகொள் புள்ளினம்' —புறம் 199-1

'வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் அழுங்கல் ஊரே' —அகம் 70-16

'மணிவாய்க் காக்கை மாநிறப் பெருங்கிளை
பிணிவீழ் ஆலத் தலங்குசினை யேறிக்
கொடுவில் எயினர் குறும்பிற் கூக்கும்' —அகம் 319-2

'குறியறிந் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளி
ளுடுகா ணனந்தலை மென்மல வகன்மின்'

—மலைபடுகடாம் 268

மலைபடுகடாத்தில் ஆலமரத்தில் பலவகைப் பறவைகள் ஒலித்ததைக் 'கூடியத்தன்ன' (orchestra) என்று குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். ஆலமரத்தில் பச்சைப்புரு, மற்றும் பிற புரு வகைகள் மைனு, காக்கை முதலிய பறவைகள் விரும்பிப் பழத்தைத் தின்னும். பல விழுதுகளுடைய ஆலமரத்தின் அடியில் நிழலில் இராமன் தனது படையுடன் கோடிக்கரையில் தங்கியிருந்தபோது இராவணனை வெல்ல மந்திராலோசனை செய்தான். அப்போது ஆலமரத்திலிருந்து பலவித பறவைகள் இரைச்சலிட்டு இராமனது மந்திராலோசனைக்கு இடையூறு புரிந்ததால் இராமன் அப் பறவைகளின் இரைச்சலை அடக்கினான். அவ்வாறு இராமன் கோடிக்கரையில் பல பறவைகளின் ஒலியை அடக்கினான் என்பதை 'வெல்போர் இராமன் அடக்கினன்' என்று அகநானூறு (70) குறிப்பிடுவதைக் கவனிக்கவேண்டும். இன்றும் இந்தக் கோடிக்கரையில் பலவகைப் பறவைகள் வலசை (Migration) வருவதைக் கவனிக்க வேண்டும். 2000 ஆண்டு காலமாகக் கோடிக்கரையில் பலவகைப் பறவைகள் வந்து சேர்ந்து தங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

'புதுக்கலத் தன்ன கனிய வாலம்
போகில்தனைத் தடுக்கும் வேனி லருஞ்சுரம்
தண்ணிய வினிய வாக
எம்மொடுஞ் சென்மோ விடலை நீயே' —ஐங். 303

மேற்சொன்ன ஐங்குறுநூற்றுப் பாடலில் ஆலமரத்திற்கு வந்த 'போகில்' என்ற ஓர் அரிய பறவையைப்பற்றிச் சொல்லப் பட்டுள்ளது. 'புதுக்கலத்தன்ன கனிய வாலம் போகில் பறவைதனைத் தடுக்கும்' என்று கூறப்பட்டுள்ளது அரிய செய்தியாகும். ஆலமரம் பழுக்த காலத்தில் வரும் சிலவகைப் புருக்களில் போகில் என்பது மிக அரிதான பறவையாகும். இந்தப் போகில் பறவையை மலையாளத்தில் 'போகனு' என்று அழைப்பர். இப் பறவை மிக விரைவாய்ப் பறக்கும் தன்மையதாகும். அரிதான இப் பறவையைக் கொல்லக்கூடாது என்று தற்போது தடைபோடப்பட்டுள்ளது. இதை ஆங்கிலத்தில் (Imperial Pigeon) என்பர்.

''முழுமுத றௌிந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது''

—புறம் 58-2

''விசும்பின் நுண்துளி மாறிய உலவை அம்காட்டு
ஆல நீழல் அசைவு நீக்கி'' —நற்றிணை 76-3

''அழல்புரை குழைகொழு நிழறரும் பலசினை
ஆலமுங் கடம்பு நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்''

—பரிபாடல் 4-67

விழுதுடன்கூடிய ஆலமரம் கிளைகளைப் பரப்பி வளர்வதால் இதன் நிழலில் போர்ப்படைகளும் தங்குவது வழக்கமாக இருந்தது.

'தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல'

—குறுந்தொகை 15-2

'துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்'

—அகநானூறு 251-8

கோசர் என்ற போர்வீரர் படையுடன் ஓர் ஆலமரத்தின் நிழலில் தங்கியதுபற்றிக் குறுந்தொகையும், அகநானூறும் கூறியுள்ளன. ஆலமரத்தின் அடியில் இவ்வாறு படையுடன் கூடுதலை 'பொதியில்' என்று இச் சங்கப் பாடல்கள் கூறுவதைக் கூர்ந்து நோக்க வேண்டும். கோடிக்கரையில் இராமன் தன் படையுடன் ஆலமரத்தினடியில் தங்கினன் என்பதை 'வெல்போர் இராமன் அருமறைக் கவித்த பல்வீழ் ஆலம்போல' என்ற அகநானூறு (70) கூறுவதினின்று உணரலாம். 'அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க் கிருக்க நிழலா கும்மே' என்று கூறியதுபோல, ஒரு போர்ப் படையே, பல விழுதுகளை விட்டுப் பரந்த ஆலமரத்தின் நிழலில் தங்கலாம். அவ்வாறு கோசர் என்ற போர்ப்படையாளர் ஆலமரத்தின் நிழலில் தங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்த ஓர் ஆலமரத்தின் நிழலில் ஒரு சிற்றூரே தங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தில் உள்ள ஓர் ஆலமரத்திற்கு 200 விழுதுகள் இருந்ததாகவும் 2000 சதுர அடிகள் பரவியிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. கல்காத்தாவில் உள்ள மரஞ்செடி கொடிப் பூங்காவில் (Botanical garden) 460 விழுதுகள் இருந்தன. இந்த மூதால மரத்தை நானும் பார்த்திருக்கின்றேன். இதன் அடிமரம் செத்துவிட்டது. ஆனால் இம் மரத்தின் விழுதுகள் மரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. சங்ககாலத்தில் இதுபோன்ற தொன் மூதால

மரங்கள் இருந்ததால் மாபெரும் போர்ப்படைகளே இம் மரத்தின் நிழலில் தங்கியிருந்தன.

சங்ககாலத்தில் மக்கள் ஆலமரத்தைத் தொழுது வந்தார்கள். ஆலமரத்தைக் 'கடவுள் ஆலம்' என்று பல சங்கப்பாடல்கள் குறிப்பிடுவதைக் கவனிக்கவேண்டும்.

"கடவு ளாலத்துத் தடவுச்சினைப் பல்பழம்
நெருந லுண்டன மென்றுது பின்னும்" —புறம் 199-1

"தாதெரு மறுகின் ஆபுறந் தீண்டும்
நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை"
—நற்றிணை 343-4

சங்ககாலத்தில் மக்கள் ஆலமரத்தின் அடியில் பலி செலுத்தினர். இங்குப் படைத்த பலிச்சோற்றைக் காக்கைகள் வந்து தின்றதை நற்றிணை (343) கூறியுள்ளது.

செங்கல்லினுல் கட்டப்பட்ட கோயிலில் ஆலமரம் முளைத்துக் கோயிலேயே இடித்ததைப்பற்றி அகநானூறு (287) கூறியுள்ளது.

"நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகைப்
புரிசை மூழ்கிய பொரியரை ஆலத்து
ஒருதனி நெடுவீழ் உதைத்த கோடை"
—அகநானூறு 287-7

ஆலம்பழத்தைத் தின்ற பறவைகளின் எச்சத்தினுல் ஆலம் முளைத்து வேர்விட்டுப் பெரிதாகிப் பின்னர், கட்டிடம் தகரும் நிலையை நாம் இன்றும் பல இடங்களில் கண்கூடாகக் காணலாம். ஆலமரங்கள் நிறைந்திருக்கும் காட்டை ஆலங்கானம் என்றழைப்பது வழக்கமாகும். திருவாலங்காடு என்னும் ஊரில் சிவபெருமான் நடனம் ஆடுவதைக் காரைக்காலம்மையார் கண்டு பாடியிருப்பதும் தெரிந்ததேயாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றிச் சங்கநூல்களில் செய்தி வந்துள்ளது. தலையாலங்கானம் என்று சொல்லப்பட்டிருப்பதால் இடையாலங்கானம், கடையாலங்கானம் ஆகிய ஊர்களும் இருந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது. ஆலமரத்தைச் செடிநூலில் Ficus Bengalenis என்றழைப்பர். ஆங்கிலத்தில் Banyan tree என்றழைப்பர். ஆலமரம் மிக அகலமாக வளர்வதால் ஆலம் என்று பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. மலையாளத்தில் பேரால் என்றழைப்பர்.

மேற்கோள்—The Flora of Madras Presidency
—J. S. Gamfle.

பாரதியின் புதிய ஆத்திசூடியில் சமுதாய விழிப்புணர்வு

[டாக்டர். செ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.,

தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

புதிய ஆத்திசூடி—குழந்தை இலக்கியம் :

"ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப் பல மதத்தினர்,
உருவகத் தாலே உணர்ந் துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினர்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்!"

நம் தாய்நாட்டின் "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா" என்று பாவேந்தரால் பாராட்டப்பட்ட புதுமைக் கவிஞர், படைத்திட்ட படைப்புகளில், சிந்தனைக்குரிய நீதி இலக்கியமாக நிற்பது, அவரது ஆத்திசூடி; இது வெறும் எழுத்துக் கோவையன்று; எழுச்சி இலக்கியம். அரிச்சுவடி இலக்கியம் அன்று; ஆண்மையும் அறிவும் ஊட்டவந்த கொள்கை இலக்கியம். தொடக்கக் கல்வி இலக்கியமாகக் குழந்தை இலக்கியமாகத்தான் ஆத்திசூடியை நாம் அறிவோம். அதனைச் சமுதாய இலக்கியமாகக் குறிக்கோள் இலக்கியமாகப் படைக்கின்றார் பாரதி. சமுதாய விழிப்புணர்வுக்குச் செந்தமிழ்ப் பாட்டுகளால் ஆற்றுப்படை அமைத்த இப் பெருங்கவிஞர் நோக்கம் யாது?

பாரதியின் ஏக்கம் :

இந்த நாட்டின் எழுச்சியை—மண்ணின் மாண்பை—தாயகத்தின் தனித்திறத்தை—வரலாற்று வனப்பை, வேற்று நாட்டவர் உணரவில்லையே என்ற வேதனைகூட இல்லை; இந்த நாட்டின் இணையற்ற புதல்வர்கள் உணரவில்லையே என்பதுதான் பாரதிக்கு ஏக்கம்! இந்த ஏக்க உணர்வு, எத்தனையோ பாடல்களில் பொங்கி எழுகின்றது! பாடுகின்றார் பாரதி உணர்வு பொங்க :

"கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்,
காளிதாசன் கவிதை புனைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையும், மீனையும்
ஓர்ந்தளந்ததொர் பாஸ்கரன் மாட்சியும்,
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணம் கண்டதும்,
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கரன் ஏற்றமும்"—

"சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்துத் தர்மம் வளர்த்ததும்,
பேரருட் சுடர் வாள்கொண் டசோகனுர்
பிழைபடாது புவித்தலம் காத்ததும்,
வீரர் வாழ்த்த மிலேச்சர்தம் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்"

அன்ன யாவும் அறிந்திலர்—என்று வருந்திப் பாடுகின்றூர் மகாகவி. எங்கோ உள்ள தொலைதூர நாடுகளின் வரலாறுகளை மாண்புகளை வரிக்கு வரி விடாமல் வருந்திக் கற்பிக்கும் இந்தியக் கல்வி முறையில் இந்த நாட்டின் பெருமைகளை உணர்த்தும் திறம் இல்லையே என்று உள்ளம் உருகினுர்! அந்த உருக்கத்தின் விளைவே பாஞ்சாலி சபதம் முதலிய அரிய படைப்புகள்!

அச்சம் தவிர வேண்டுதல்:

இந்திய சமுதாயத்திற்கு எழுச்சி வேண்டும்; துணிவு வேண்டும்; அஞ்சாமை வேண்டும்; புதிய தெம்பு வேண்டும்; உற்சாகம் வேண்டும் என்று முழங்கினுர்! உலகில் ஆங்காங்குப் புதுமையும் புரட்சியும் பொங்கி எழுந்து, புதிய உலகம் உருவாவதைச் சுட்டிக்காட்டி முழக்கமிட்டார்! அச்சத்தின் பிடியிலே கிடந்த மக்களின் அவல நிலையைக் கூறிக் கூறி வருந்தினுர்!

"சிப்பாயைக் கண்டஞ்சுவார் !—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம் பதைப்பார் !
துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டில் ஒளிப்பார் !
அப்பால் எவனோ செல்வான் !—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார் !
எப்போதும் கைகட்டுவார் !—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார் !"

என்றெல்லாம் பாடும் கவிஞர், ''கஞ்சி குடிப்பதற்கிலார்—அதன், காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்'' என்று அந்த அச்சத்திற்கு அடிப்படை சிந்திக்காமைதான் என்று சுட்டிக் காட்டுகின்றார்!

''தேவி கோயிலிற் சென்று
தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்—கிளியே!
அஞ்சிக் கிடந்தாரடி!''

''அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடி—கிளியே!
ஊமைச் சனங்களடி!''

என்று பாடியவர், அந்த நிலைக்குக் காரணத்தையும் மிகத் தெளிவாகக் கூறிவிடுகின்றார்:

''ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக் கோர்கணமும்—கிளியே!
வாழத் தகுதி யுண்டோ?''

என்று பாடி நடிப்புச் சுதேசிகளை அடையாளம் காட்டுகின்றார் கவிஞர். ''இந்த நாடு நம் நாடாயிற்றே; இதனை ஆள்வது நம் பொறுப்பாயிற்றே; நம்முடைய உடன் பிறந்தோர்க்குரிய இதனை மாற்றார் வலிந்து பற்றிக்கொண்டு அடிமைப்படுத்தி வைத்திருப்பது அநீதி அல்லவா?'' என்ற மான உணர்வு வரவேண்டும் என்று ஆணித்தரமாக முழங்கி நிற்கின்றார் பாரதி!

அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்திய மக்கள், அச்சம் நீங்கித் துணிவுகொண்டு போராடி அடிமைத்தளையை அறுத்தெறிய வேண்டும் என்பது பாரதி இலட்சியம். நாட்டுரிமைவேண்டும் என்ற இந்தியக் குடிமகனைப் பார்த்து ஆங்கிலேய அதிகாரி கூறுவதுபோலக் கற்பித்துப் பாடுகின்ற பாரதியின் வீர வினாக்களைக் கேளுங்கள்:

''சாதிச் சண்டை போச்சோ?—உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்!—கண்முன்
நிற்கொணாது போடா!''

''அச்சம் நீங்கினாயோ?—அடிமை!
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுதல் ஒழித்தாயோ?''

காலமாற்றமும் பாரதியின் வீரவாசகமும்:

"அச்சமே கீழ்களது ஆசாரம்" என்று கயமையிலே பேசினுன் பொதுமறைப் புலவன் வள்ளுவன். அந்தப் பாதையிலே சமுதாயத்தின் சிந்தனையை அழைத்துப்போகிருன் புரட்சிப்புலவன் பாரதி. ஆம்; ஆத்திசூடியின் ஆரம்ப வரியே இந்தக் கொள்கைச் சூத்திரந் தான்! "அச்சம் தவிர்!" என்று அகரத்திலே தொடங்கி, நீதி இலக்கியத்தை நெஞ்சம் நிமிர்ந்து தொடங்குகின்ருன் எட்டயபுரத்தின் கவிஞர் ஏறு! சோம்பிக்கிடந்த மக்களுக்குத் தங்களைத் தாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமாஞல் முதலில் அச்சம் என்ற சேற்றிலேயிருந்து அவர்களைக் கரையேற்றவேண்டும் என்பது மக்கட்கவிஞன் கருத்து! அதனுல்தான் தன்னுடைய இலக்கிய நீதியை 'அச்சம் தவிர்' என்று தொடங்குகின்ருன்! ஆத்திசூடி என்ற வேள்வி மந்திரங்களிலே இதுவே முதல்மந்திரமாக உள்ளது!

ஒளவை வாழ்ந்த காலத்திலே நாட்டின் நிலைமை வேறு; சமுதாயத்திற்கு அற நினைவை ஊட்டி அதன்பின் அறம் உரைக்கத் தொடங்குகின்ருள் மூதாட்டி! அதனுல், 'அறம் செய விரும்பு' என்பதே அங்குத் தொடக்கமாக அமைந்திடக் காண்கின்ருேம்; அங்கேயும், 'செய்' என்று கூருமல். 'செய விரும்பு' 'ஆசைப்படு' என்பது எவ்வளவு நயமானது! அக்காலச் சமுதாய இலக்கிய நிலைக்கு அந்தத் தொடக்கம் போதுமானதாக இருந்தது; ஆனுல் பாரதி மலர்ந்த காலம், வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வெறி எல்லை தாண்டித் தாண்டவம் ஆடிய காலம்; மறுமலர்ச்சியை ஊட்டிச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்குமாறு செய்ய மக்களின் தன்னுணர்வைத் தட்டியெழுப்பிய இந்த வீரக் கவிஞனுக்கு அச்சம் போக்கும் பணியே முதற்கண் தேவை என்று பட்டது; பாவேந்தன் பாரதிதாசனுக்கோ சமுதாய விடுதலையே முழுமூச்சாக இருந்தது. அதனுல், பாரதிதாசன் ஆத்திசூடியோ, "அனைவரும் உறவினர்" என்றே தொடங்கிடக் காண்கின்ருேம்; ஒன்றுபட்ட நாட்டைக் காணும் உயர்நோக்கம் அதிலே ஒளிரக் காண்கின்ருேம்!

"ஆண்மை தவறேல்" என்ற பாரதியின் வீர வாசகம், முதல் தொடர்க்கு விளக்கம் தரும் கனற்பொறிகளாகவே தெறித்துவிடுகின்றன! ஆம்; தவருத ஆண்மைக்குத் தலை வணங்கும் தாய்த் திருநாட்டின் எழுச்சி இப் புதுயுகக் கவிஞனுக்குப் போற்றுதலுக்குரிய தாரக மந்திரமாகவன்ருே அமைகின்றது!

வருகின்ற பாரதத்தை வாழ்த்தும் இம் மாகவிஞன்,

"ஒளிபடைத்த கண்ணினுய்!
உறுதிகொண்ட நெஞ்சினுய்!

களிபடைத்த மொழியினுய்!
கடுமை கொண்ட தோளினுய்!
தெளிவுபெற்ற மதியினுய்!
சிறுமை கண்டு பொங்குவாய்!
எளிமை கண்டு இரங்குவாய்!
ஏறுபோல் நடையினுய்!''

என்றல்லவோ வரவேற்கின்ருன்! இங்கேயும், வீரம் கொப்பளிக்கும் இந்தியக் குடிமகனை—ஏறுபோல் பீடு நடை கொண்ட காவலனை—முதற்கண் நடத்திக் காண்கின்ருன்.

அஞ்சாமைப் பண்பே ஆத்திசூடியின் அடிப்படை :

வீரம் விளைநிலமாக நின்றவன் புரட்சிப்புலவன்; பராசக்தியைத் தொழுது தொழுது, சிந்தித்துச் சிந்தித்து, பாடிப்பாடி உரமேறிப்போன உள்ளம் பாரதியின் உள்ளம்; அது, ''பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்! பரிபூரணனுக்கே அடிமை செய்வோம்!'' என்று முழங்கிய வீர நெஞ்சம் அல்லவோ! அதுமட்டுமோ? காலனையே—இறப்புக்கடவுளையே கூப்பிட்டுத் தட்டிக் கேட்கும் மனம் அது! எப்படி?

''காலா! உனை நான் சிறுபுல்லென மதிக்கிறேன்—என்றன்
காலருகே வாடா! சற்றே உன்னை மிதிக்கிறேன்!''

என்று நெஞ்சு நிமிர்த்துக் கேட்கும் உரம், இந்த நூற்ருண்டுக் கவிஞர்க்குள் யார்க்கு இருந்தது? கி. பி. 15ஆம் நூற்ருண்டில், அருணகிரி நாதர் காலனுக்கு விட்ட அலங்காரப் பாட்டுக்கு இணையாக அல்லவா இந்தக் கவி உள்ளது! இதோ அருணகிரி நாதரின் ஆற்றல் மிகுந்த அந்தத் திருப்பாட்டைக் கேளுங்கள் :

''பட்டிக் கடாவில் வரும் அந்தகா! உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்! வெய்ய சூரனைப்போய்,
முட்டிப் பொருதசெவ் வேற் பெருமான் திரு முன்பு நின்றேன்!
கட்டிப் புறப்படடா! சத்தி வேல் என்றன் கையதுவே.''

———

(தொடரும்)

ஆர்த்தெழுந்தால்!


(இன்னிசை வெண்பா)

''குட்டிமணி தங்கதுரை காளை ஜெகன்போன்ற
மட்டில்லாச் சுத்த மறத்தமிழர் ஆர்த்தெழுந்தால்
வெட்டியே சிங்களனை வேரறுத்துக் கட்டிவந்து
கொட்டிவைப்பர் காலடியிற் காண்!''

—பாவலர் இடிமுரசு, பி. லிட்.,

மறை. மாணிக்கவாசகனர் மறைவு

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரின் இரண்டாம் மைந்தர் மறை. மாணிக்கவாசகனர் அவர்கள் கடந்த 11-8-83,



வியாழக்கிழமையன்று தமது 79 ஆவது அகவையில், சென்னை சவகர் நகரில் இறையடி யெய்தினர் என்னும் செய்தியறிந்து ஆற்ருெணுத் துயரெய்துகின்ருேம்.

திரு மாணிக்கவாசகனர் தம் பெயருக்கேற்பவும், தம் தந்தையாரின் கொள்கைப் படியும் சைவமும் தமிழும் தழைத்தோங்க, தம்மாலியன்ற பணிகளைச் செய்து வந்தார். சென்னை மாநகராட்சியில் பள்ளி ஆசிரியராகப் பணி யேற்ற இவர், இளஞ்சிருர்க்கு எழுத்தறிவிக்கும் இறைவனுகத் திகழ்ந்ததோடு, இடை இடையே தமிழ்த் திருமணங்களை நடத்தி வைக்கும் பணியினை மேற்கொண்டும், வழிபாடுகள், சடங்குகள் ஆகியன தமிழ்முறையிலேயே நடைபெற உதவியும் வந்தார்.

இவர்தம் குமுகாயத்தொண்டுகளையும் ஆசிரியப் பணியின் சிறப்பினையும் பாராட்டு முகத்தான் இவருக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் நல்லாசிரியர் பட்டமும் பரிசும் வழங்கிச் சிறப்பித்தார்.

இங்ஙனம் வாழ்வாங்கு வாழ்ந்த இவருக்கு ஓர் ஆண் மகவும், இரு பெண்மக்களும் தோன்றினர். மகனுர் திரு மறைக் காடன் என்பவர் உயர்கல்வி பெற்று வங்கி யொன்றில் பணியாற்றி வருகிருர். பாவை, மங்கை என்னும் பெண்மக்கள் இருவரும் ஆசிரியப் பணியினை மேற்கொண்டுள்ளனர். இங்ஙனம் நிறைவாழ்வு வாழ்ந்து வந்த மாணிக்க வாசகனரின் மறைவு, தனித் தமிழ்க் குடும்பங்கட் கெல்லாம் ஓர் இழப்பேயாகும். மறைந்த மாணிக்கவாசகனரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு இவர்தம் இன்னுயிர் தில்லை அம்பலக் கூத்தன் திருவடிகளில் இன்புற இறைஞ்சுகிருேம்.

———

பேராசிரியர்
மறை. திருநாவுக்கரசர் மறைவு

மறைத் திரு. மறைமலையடிகளாரின் மூன்றும் மைந்தரும், மறை. மாணிக்கவாசகரின் இளவலும், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியருமான மறை. திருநாவுக்கரசு அவர்கள் 1—9—83 வியாழக் கிழமை இரவு 11 மணியளவில், சென்னை சவகர் நகரில் உள்ள தமது இல்லத்தில் 76 ஆவது அகவையில் இறையடி சேர்ந்தனர் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம்.



மறை. திருநாவுக்கரசு அவர்கள் மறைமலையடிகளாரின் மூன்றும் திருமகனாராக 21—8—1907இல் தோன்றினார். இளமையில் தம் தந்தையாரிடமே இலக்கண இலக்கியங்களைக் கற்கத் தொடங்கிப் பின்னர் திருவையாறு அரசர் கல்லூரியில் 1926முதல் 1932ஆம் ஆண்டு வரையில் தமிழ் பயின்று வித்துவான் பட்டம் பெற்றார். காந்தியடிகளிடத்தும் பேராயக்கட்சி (காங்கிரஸ்) யிடத்தும் பற்றுக்கொண்டு கதராடையே உடுத்தி வந்தார்.

1932 முதல் 1938 வரை நுங்கம்பாக்கம் மாநகராட்சி உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1938 ல் இந்தியை எதிர்த்துத் தம் ஆசிரியப் பணியைத் துறந்து இந்தி எதிப்புப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றார். அங்ஙனமே 1941ல் நாட்டு விடுதலைப் போரிலும் ஈடுபட்டு ஓராண்டுக் காலம் சிறை ஒறுப்புக்காளானார். இவர் பெரியார் அவர்களிடத்தும் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தும் நெருங்கிய தொடர்பும் பற்றும் கொண்டிருந்தார். அங்ஙனமே சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களிடத்திலும், அவர்தம் தமிழரசுக் கழகத்திடத்திலும் பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்தார்.

இவர் ஆற்றிய சமயத்தொண்டுகள் மிகப்பல. தொடர்ந்து 15 ஆண்டுகள் குன்றத்தூரில் ஆண்டுதோறும் சேக்கிழார் விழாவினை முன்னின்று நடத்தி வந்தார். நாடெங்கும் சுற்றிச் சமயச் சொற்பொழிவுகள் பல ஆற்றிவந்தார். 1952 ல் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்ருர். அதனின்றும் ஒய்வு பெற்றபின் நூலாராய்ச்சியிலும், சமயப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டார். 1977 இல் இவர் தம் துணைவியார் காலமானுர். இவருக்கு ஆண்மக்கள் ஐவரும் பெண்மக்கள் இருவரும் உளர்.

இவர் பெரிய புராணத்தை ஆய்வு செய்து நான்கு பகுதிகளாக வெளியிட்டுள்ளார். மறைமலையடிகளார் வரலாற்றை விரிவான முறையில் எழுதியுள்ளார். நாயன்மார்களைப்பற்றி இவர் எழுதிய நூல்களைச் சைவப் பெருமக்கள் பெரிதும் விரும்பிப் படிக்கின்றனர். இவரியற்றிய சைவ வினுவிடையின் பெருமையினை அறிந்த ஹவாய்த் தீவிலுள்ள சைவ சித்தாந்த திருமடத்தின் தலைவரும் அமெரிக்க சைவப் பெரியாருமான சுவாமி சுப்பிரமணியர் அவர்கள், அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் திட்டமிட்டுள்ளனர்.

இங்ஙனம் வாழ்வாங்கு வாழ்ந்த இப் பெரியாரின் மறைவு தமிழுலகிற்கும், சைவ உலகிற்கும் பேரிழப்பாகும். மறைந்த இப் பேராசிரியரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு இவர்தம் இன்னுயிர் இறையடியில் இன்புற இறைஞ்சுகிறோம்.

திருநாவுக்கரசர் புகழ் வாழ்க!

மறைமலை யடிகளார் மக்கள் தம்முள்
மாண்புபல பெற்றவரும் மொழிப்போர் வெற்றி
நிறைகள்பல பெற்றவரும் நிசவாழ்க் கையில்
நேசர்களின் துயர்துடைக்கும் நெஞ்சம் வாய்ந்த
குறைவில்லாப் பண்பாளர் பெரியார் தொண்டர்
கொஞ்சுதமிழ்ப் பேச்சாளர் கொள்கைச் சிங்கம்
மறைதிருநா வுக்கரசர் மறைந்தா ரிந்நாள்;
மறையவில்லை அவர்புகழ்தான்; என்றும் வாழ்க!

—நாஞ்சில் கா. கணபதி.

சைவமும், வைணவமும் தழைத்தோங்கும் தலைச்சங்காடு

[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

"சூலஞ்சேர் கையினீர் சுண்ணவெண்ணீறு ஆடலீர்
நீலஞ்சேர் கண்டத்தீர் நீண்டசடைமேல் நீரேற்றீர்
ஆலஞ்சேர் தண்கானல் அன்னமன்னுந் தலைச்சங்கைக்
கோலஞ்சேர் கோயிலே கோயிலாகக் கொண்டீரே"

என்று சம்பந்தர் பெருமான் போற்றிப் பரவும் அருள்மிகு சங்காரண்யேசுவரர் மாடக்கோயிலும்,

"கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்
தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்
விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றதிங் கென்றுகொலோ?"

என்று திருமங்கையாழ்வார் வேண்டிக் கேட்டுப் பாடி மகிழும் அருள்மிகு நாண்மதியப் பெருமாள் மாடக்கோயிலும் ஒருங்கே அமைந்துள்ள இடம் தலைச்சங்காடு. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள இத்தலம் பூம்புகாரிலிருந்து தரங்கம்பாடி செல்லும் வழியில் நான்கு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மயிலாடு துறையிலிருந்து தரங்கம்பாடி செல்லும் வழியில் ஆக்கூர் வந்து, அங்கிருந்தும் தலைச்சங்காட்டை அடையலாம். ஆக்கூரிலிருந்து தலைச்சங்காடு ஏறக்குறைய இரண்டு கிலோமீட்டர் தொலைவு.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் கோச்செங்கட்சோழ மன்னனால் எடுப்பிக்கப்பட்டதாகக் கருதப்படும் எழுபது மாடக்கோயில்களுள், தலைச்சங்காட்டு மாடக்கோயில்களும் அடங்கும். மாடக்கோயில்கள் வரிசையில் பூம்புகாருக்கு அருகிலுள்ள சாய்க்காட்டைப் பார்த்து விட்டு, ஆக்கூருக்குச் சென்றபோது ஆக்கூர் தான்தோன்றி மாடத்தின் சிவாச்சாரியார் வைத்தியநாத குருக்கள்தாம் தலைச்சங் காட்டைப்பற்றி எங்களுக்குத் தெரியப்படுத்தினார். தெரியப் படுத்தியதுடன், தாமும் உடன்வந்து தலைச்சங்காடு சங்காரண்யேசு வரர் ஆலயத்தின் சிவாச்சாரியார் கந்தசாமி குருக்களுக்கு அறிமுகப்படுத்த, அவர் எங்களை வரவேற்றுக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார்.

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள இத்தலத்தின் புராணப் பெருமைகளைக் கேட்டபடியே கோயிலை அடைந்தோம். கிழக்கு நோக்கி இருக்கும் இக் கோயிலின் கோபுரமற்ற வாயிலுள் நுழைந்ததும் வலப்பக்கம் பைரவரும், கதிரவனும் தனித்தனி மண்டபங்களில் வீற்றிருப்பதைக் காணலாம். இடப்பக்கம் அரங்க மேடையும், மடைப்பள்ளியும் உள்ளன. கோயில் நுழைவாயிலில் அதிகாரநந்தி காணப்படுகிறது.

கோயிலின் வெளித்திருச்சுற்றில் வடகிழக்குப் பகுதியிலுள்ள அம்மன் கோயிலும் மேடைக் கோயிலாய்க் கருங்கல் திருப்பணியாய் அமைக்கப்பட்டுள்ளது. வேலைப்பாடற்ற தூண்களால் தாங்கப் பட்டுள்ள முன்மண்டபத்தின உச்சியில் மணிக்கூண்டு அமைந் துள்ளது. உள் மண்டபத்தில் பலிபீடமும், நந்தியும், பிள்ளையார் சிலையொன்றும் அம்மன் திருமுன்னை நோக்கியபடி அமைந்துள்ளன. எளிய அமைப்புடன் கூடிய விமானத்தை உடைய கருவறையில் அம்மன் அழகுநாயகியாய் (சௌந்தரநாயகி) எழுந்தருளியுள்ளார். அம்மன் கருவறைச் சுவரிலுள்ள தெய்வப்புரைகள் அனைத்துமே வெறுமையாய் அமைந்துள்ளன. இக் கோயிலின் தாங்குதளத்திற்கு மேல் யாளிவரிமானம் செதுக்கப்பட்டுள்ளது. இவ் வரிமானம் கூடும் இடங்களில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

வீரர் இருவர் தமக்குள் போரிடுவது போலவும், விலங்கு களுடன் போரிடுவது போலவும் சிற்பங்கள் அமைந்துள்ளன. அழகான வேலைப்பாடு கொண்ட இச் சிற்பங்கள் காணக்காணக் கண்ணில் நிற்பவை; மலைப்பைத் தருபவை; வீரக்கற்களை நினைவூட்டுபவை.

வெளித்திருச்சுற்றின் மேற்குப்புறத்தில் தென்மேற்கு மூலையில் சீனிவாசப்பெருமான் மதிலை ஒட்டியதோர் ஒட்டுமண்டபத்தில் வீற்றிருக்கிறார். வடமேற்கு மூலையில் உடன்கூட்டத் தெய்வங் களுள் ஒன்றான சேட்டைதேவியின் தனிச் சிற்பம் ஒரு கல் மேடையின்மீது வைக்கப்பட்டுள்ளது. மிகப் பழமையானதாகக் காட்சிதரும் எழில்நிறைந்த இச் சிற்பம் தக்க பாதுகாப்பின்றி மூலையில் கிடத்தப்பட்டிருந்தது வேதனையாக இருந்தது. இத் திருச் சுற்றின் நடுவில் மூடிய வாசலும் அதற்கு அருகில் விமானத்துடன் கூடிய வல்லப விநாயகர் உட்கோயிலும் உள்ளன.

வடக்குப்புற வெளித்திருச்சுற்றில் முருகனின் உட்கோயில் விமானத்துடனும், முன்புறத்தில் ஓர் ஒட்டு மண்டபத்துடனும் அமைந்துள்ளது. மாடக்கோயிலை ஒட்டிச் சண்டிகேசுவரரின் சிறு கோயில் விமானத்துடன் இருப்பதைப் பார்த்தோம். இவ் வடக்கு வெளித்திருச்சுற்றையடுத்து நந்தவனம் இருப்பதையும், அதற்குச்

செல்வதற்காகவே இத் திருச்சுற்றில் இரண்டு வாயில்களை அமைத் திருப்பதையும் கந்தசாமி குருக்கள் காண்பித்தார். தெற்கு, வடக்கு மதில்சுவர்களில் நுழைவாயிலுக்கு அருகில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டு மகிழ்ந்தபடியே திருச் சுற்றின் நடுவில் எழிலார்ந்த தோற்றத்துடன் மூன்று தளக் கோயிலாய் அமைந்துள்ள அருள்மிகு சங்காரண்யேசுவரர் திருக் கோயிலின் அருகில் வந்தோம்.

இம் மாடக்கோயிலை நோக்கியபடி கிழக்குத் திருச்சுற்றின் நடுவில் நந்திமண்டபமும், அதன்பின் அழகிய கட்டட வேலைப் பாடுடன் கூடிய பலிபீடமும், அதையொட்டிப் பிள்ளையாருக்கென்று ஒரு சிறுகோயிலும் அமைந்துள்ளன. விநாயகருக்கான இந்தச் சிறுகோயிலும், அதன் சிறுவிமானமும் மிக அழகானவை. இம் மாடக்கோயிலின் முகப்பில் இரண்டாம் தளத்தில் ஒரு வாயிலும் (தற்போது ஏற்பட்டது) அதற்குக் கீழே முதல்தளத்தில் ஓர் அழகிய சிற்பமும் உள்ளன. ஒரே கல்லில் செதுக்கப்பட்டு இங்குப் பொருத்தப்பட்டிருக்கும் இச் சிற்பத்தின் அமைப்புமுறை இதன் பழமையை உணர்த்துகிறது. இக் கோயிலின் துணைத்தளமும், தாங்குதளமும், கொடுங்கை அமைப்பும், யாளிவரிமானமும் மிகச் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. கருங்கல் திருப்பணியான இம் மாடக்கோயிலின் முதன்மை நுழைவாயில் கோயிலின் தெற்குப் பக்கத்தில் அழகிய சதுர மண்டபமாய் அமைந்துள்ளது. இவ் வாயிலின் பன்னிரண்டு படிகளும் கிழக்கு நோக்கி அமைந் துள்ளன. வேலைப்பாடமைந்த நான்கு தூண்கள் தாங்கியிருக்கும் இம் மண்டப வாயிலின் வழியே உள்நுழைந்தால் நம்மை எதிர் கொள்வது முன்மண்டபம். இதன் வடக்குப்புறத்தில் மூன்று அறைகள் வெறுமையாக உள்ளன. இவற்றுள் நடராசர், சிவகாம சுந்தரி, சோமாசுகந்தர், பிள்ளையார், சந்திரசேகரர், வள்ளி தெய்வயானையுடன் முருகர், சண்டிகேசுவரர் முதலிய தெய்வங் களின் செப்புத் திருமேனிகள் இருந்ததாகவும், இப்போது பாதுகாப் பிற்காக அவற்றைத் திருவெண்காட்டில் வைத்துள்ளதாகவும் கந்தசாமி குருக்கள் தெரிவித்தார். முன்மண்டபத்தில் உள்ள வாயில் வழியே உள்மண்டபத்திற்குள் நுழைந்தோம். இவ் வுள் மண்டபத்தின் நடுவே கருவறையும், அதைச் சுற்றியுள்ள உள் திருச்சுற்றில், நடப்பதற்கென இடம் விடுத்து, வெளிச்சுவரை ஒட்டி மேடைபோன்ற உயரமான பகுதியும் உள்ளன. இம் மேடையின் தெற்குப்புறத்தில் சம்பந்தர், சுந்தரர், அப்பர், சண்டேசுவரர், திருமால் இன்னும் பல தெய்வத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. மேற்குப்புற மேடையில் பிள்ளையாரும், பாலசுப்பிரமணியரும் உள்ளனர். வடக்கே நீலகண்டேசுவரர் காட்சியளிக்கிறார்.


கருவறைக்கு முன்னால் பலிபீடமும், நந்தியும் உள்ளன. வாயிலின் இருபுறமும் வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில் தெற்கில் அகிலாண்டேசுவரர் பெரிய இலிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். தெற்கிலுள்ள தெய்வப்புரைகளில் விநாயகரும், தென்திசைக் கடவுளும் காணப்படுகின்றனர். மேற்குபுறத் தெய்வப்புரையில் இலிங்கோத்பவரும், வடக்குப்புறத் தெய்வப்புரையில் நான்முகனும், கொற்றவையும் உள்ளனர்.

கருவறையில் அருள்மிகு சங்காரண்யேசுவரர் இலிங்க மேனியராய் ஆவுடையார்மீது எழுந்தருளியுள்ளார். மிகச் சிறிய திருமேனி. திருமாலுக்குப் பாஞ்சசன்யம் என்ற சங்கைக் கொடுத்ததாகவும் அதனாலேயே சங்காரண்யேசுவரர் என்று பெயர் வந்ததாகவும் ஒரு கதை நிலவுகிறது.

இக் கோயிலில் உள்ள கல்வெட்டுகளைப் பார்ப்பதற்காக மீண்டும் வெளித்திருச் சுற்றுக்குச் சென்றோம், மேற்கு வெளித் திருச்சுற்றில மாடக்கோயில் சுவரின் அடிப்புறத்தில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் திருப்பணி செய்தவர்களின் கைவண்ணத்தால் இக் கல்வெட்டுகள் இடம்மாறி, சிதைந்து, செய்தியைத் தொடராகப் படித்தறிய முடியாதபடி மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. திருப்பணி நடத்தும் அனைத்துக் கோயில்களிலும் இந்தக் கொடுமை தவறாமல் நிகழ்கிறது. இதற்கு அரசு தான் ஒரு முடிவு கட்டவேண்டும்.

இக் கோயிலில் இருந்து உத்தமசோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவன், இரண்டாம் இராசாதிராசன் ஆகியோர் காலத்தில் வெட்டப்பட்ட பத்துக் கல்வெட்டுகளைக் கல்வெட்டுத் துறையினர் படியெடுத்துள்ளனர். அவை 1925ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் குறிப்பேட்டில் 204ஆம் எண்ணிலிருந்து 213ஆம் எண்வரை குறிப்பிடப்பட்டு உள்ளன. பல சுவையான செய்திகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் நமக்குத் தெரிவிக்கும் இக் கல்வெட்டுகளுள் பழமையானது உத்தம சோழனின் கல்வெட்டு; இக் கோயிலுக்குப் பராந்தகன் மாதேவடிகள் அல்லது செம்பியன்மாதேவி (உத்தம சோழனின் அன்னை) தலைச்சங்காடு மகாதேவரின் பெரிய கோயிலுக்கு ஒரு வெள்ளிப் பாத்திரம் கொடையாகக் கொடுத்த செய்தியைக் கூறுகிறது. இன்னொரு சிதைந்த கல்வெட்டில் திருவேள்விக்குடி மகாதேவர் ஆலயத்திற்கு ஊரவையார் நிலம் விற்ற செய்தி கூறப்பட்டு உள்ளது. இக் கல்வெட்டு முற்காலச் சோழர்களுடையதாய் இருக்கலாம் என்று அரசு கல்வெட்டு ஆய்வாளர் கருதுகின்றனர்.

தலைச்சங்காட்டு சைவ வைணவ திருக்கோயில்கள்



அருள்மிகு சங்காரண்யேசுவ்ரர் பெருந் திருக்கோயிலின் தென்புற நுழைவாயில்

—தலைச்சங்காடு



அருள்மிகு நாண்மதியப் பெருமாள் கோயில் உற்சவர் வெண்சுடர்ப் பெருமாளும் தேவியரும்

(செப்புத் திருமேனிகள்)



அருள்மிகு நாண்மதியப் பெருமாள் மாடக்கோயில்

—தலைச்சங்காடு

மூன்றும் இராசராச சோழனின் கல்வெட்டுகளில் ஒன்று செயங்கொண்ட சோழநல்லூர் ஊரவையார் அவ்வூரைச் சேர்ந்த இராசேந்திர சோழீச்சரம் உடையார், குசலீசுவரம் உடையார், வில்லீசுவரம் உடையார் என்ற மூன்று சிவாலயங்களுக்கும் கேட் பாரற்றுக் கிடந்த பயிரிடக்கூடிய மூன்று வேலி நிலங்களை வரியில் லாச் சொத்தாக ஒப்படைத்தனர் என்றும், அதை அப்படியே ஒழுகு பொத்தகம் இரண்டிலும் பதிவு செய்து, அத்துடன் அடுத்த நில உரிமைபற்றிய ஏற்பாட்டினபோர்து 'இறையிலி' என்பதற்குப் பதிலாகத் 'திறப்பு' என்று குறிக்கப்பட்டால் சிற்றூர்க் குடிகள் நிலவரிகளைச் செலுத்தவேண்டும் என்று கட்டளை இடப்பெற்றது என்றும் தெரியப்படுத்துகின்றது. இக் கல்வெட்டின் மூலம் பொத் தகம், ஒழுகு என்ற பதிவேடுகளின் பெயர்களும், சோழர்கள் காலத் தில் இருந்த பதிவு முறையும் தெளிவாகின்றன.

மூன்றும் இராசராச சோழதேவனின் இன்னொரு கல்வெட்டு இச் சிற்றூரையும், இதன் கிழக்கில் உள்ள சிற்றூரையும் காவல் காக்கும் பாடிகாப்பாளருக்குத் (காவற்காரர்) தங்குமிடம் இல்லா மையாலும், அவர்கள் பெற்ற உதவித்தொகைகள் அவர்கள் வாழ்க் கைப் பிழைப்புக்குப் போதாமையாலும், ஊரின் பேரவை அவர்தம் வீட்டு மனைகளுக்காகவும், பராமரிப்புக்காகவும் நான்கு வேலி நிலம் கொடையாகக் கொடுத்தமையைத் தெரிவிக்கிறது. அரசத் துரோகக்குற்றத்தைத் தவிர வேறு எந்தச் சூழ்நிலையிலும் இந்த நிலம் மாற்றிக் கொடுக்க முடியாதபடி அவர்களுக்கே உரிமை உடைய தாகும் என்ற செய்தியும் இதிலிருந்து பெறப்படுகிறது.

கோயிலின் மேற்குச் சுவரில் உள்ள இரண்டாம் இராசாதி ராசனின் ''கடல் சூழ்ந்த பார் மாதரும்'' என்ற முன்னுரையுடன் தொடங்கும் கல்வெட்டில் செயங்கொண்ட சோழவள நாட்டின் ஒரு உட்பிரிவான ஆக்கூர் நாட்டிலுள்ள தலைச்சங்காடு பெருங்கோயி லின் தேவதான நிலங்களின் இருப்பிடமும், பரப்பளவும் பதிவுப் புத்தகத்தில் உள்ளதுபோல் பட்டியல் போட்டுத் தரப்பட்டுள்ளது. பொன் மேஞ்ச சோழ விளாகம் என்று ஒரு நிலத்தின் பெயரும் காணப்படுகிறது. அதே சுவரில் உள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவனின் கல்வெட்டின் மூலம் ஒரு குத்தகைக்காரன் வருடாந்திர பாக்கியான எட்டு கலம் நெல்லைத் தொடர்ந்து கொடுக் கத் தவறியதாலும், அதனல் பல வருடங்களுக்கான குத்தகை சேர்ந்து விட்டதாலும், அவனுடைய ஒரு வேலி நிலம் திருநாமத்துக் காணியாக மாற்றப்பட்டதென்றும் இப் பறிமுதலுக்குக் குத்தகைக் காரனின் ஒப்புதலும் பெறப்பட்டது என்றும், ஊரவையின் அனுமதி

யுடன் அந்த நிலம் வேறு குத்தகைக்காரர்களுக்கு அடைமுதல் பற்றுக்கு விடப்பட்டது என்றும் தெரிய,வருகின்றது.

தெற்குப்புறச் சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் தனுசு மாதத்திலிருந்து தலைச்சங்காட்டில் சிற்றூர் அலுவல் பார்க்கும் ஊரவையின் உறுப்பினர்களின் கட்டளைமுறை தரப் பட்டுள்ளது. அதில் சிற்றூரின் பத்துக் கட்டளைகளிலும், சிற்றூரைச் சுற்றி இருக்கும் பிற சிற்றூர்களிலும் உள்ள வாரம் நிலங்களுக்கு உரித்தான சில கடப்பாடுகளும், சிறப்புரிமைகளும் வரையறுக்கப் பட்டுள்ளன.

(தொடரும்)

———

'தமிழருமை சொல்லட்டும்!'

[வேலூர் ம. நாராயணன், எம் ஏ.]

விண்முட்டும் இமயத்தின்
முடிதொட்டுக் கொடிநட்ட
மூவேந்தர் தோன்றலே வா !—இன்று

கண்முட்ட நீர்சிந்திக்
கையேந்தி வாழ்கின்ற
கடைகெட்ட கலைகற்ற தேன் ?

மலர்க்கொத்து மனம்பெற்றும்
மறமுற்ற மெய்பெற்றும்
மிகுவலியர் ஈன்ற செல்வா !—இன்று

குலங்கெட்டுக் குணங்கெட்டுக்
கோழையரின் உளம்பெற்றுக்
கவல்கின்ற நிலைபெற்ற தேன் ?

சிந்தித்துச் சிந்தித்துச்
செயல்பட்டு ஏற்றங்கள்
செவ்வையாய்க் கண்ட மறவா !—இன்று

நிந்தித்து நிந்தித்து
நமக்குள்ளே வஞ்சனை
நாள்தோறும் வளர்ந்திட்ட தேன் ?

நடைகெட்டு நுழைந்தன்று
நம்நாட்டில் நலங்கண்ட
நரிக்கூட்டம் புறங்கண்ட வா !—இனித்

தொடைதட்டு ! தோள்தூக்கு !
துடித்தெழுக ! தமிழருமை
சொல்லட்டும் புவியெங்குமே !!

ஈழம் வெல்வோம்

[புலவர். திருமங்கலம் வை. தங்கமணி]

செயவர்த்தனே என்னும் காட்டுப் பன்றி
செடியதனின் மூலத்தை எடுத்து உண்டு
செயலிழக்கச் செய்கின்ற தன்மை போலச்
செம்மைசேர் இந்தியரைத் தமிழர் தம்மைத்
தயவில்லாக் காட்டாட்சி நடத்தல் வேண்டித்
தன்னுண்மை இல்லாத ராணு வத்தின்
தயவாலே பேயாட்சி நடத்து கின்ருன்
தாந்தோன்றி வெறியனவன் ஓநாய் அன்ரே! 1

கொல்கின்ருர்! சுடுகின்ருர்! சிறைவைக் கின்ருர்!
கொத்தடிமை போலங்கு நடத்து கின்ருர்!
கல்லான மனத்தோடு தாயைப் பிஞ்சுக்
குழந்தைகளைப் பேதமின்றி அழிக்கின் ருர்கள்!
'நில்லாத தீயாட்சி நிலைக்கும் என்ருல்
நிலமெல்லாம் என்பினது குவிய லாகும்'
வல்லோரே! நல்லோரே! வழியைக் காண்பீர்!
வழிநடத்திச் சென்றிடுவீர் ஈழம் வெல்ல! 2

எங்களினத் தோழர்களே ஈழ நாட்டில்
இயம்ப வொணு உங்களது துன்பங் கண்டு
'பொங்கியெழும் நட்பதனைச் செயலிற் காட்ட
வாய்த்ததொரு பொழுதிதுகாண் புகழின் மேலோய்'
தங்கங்கள் விளைகின்ற தரணி யாக்கித்
தந்ததன்பின் நமைவிரட்ட நினைக்கும் அந்த
வெங்கொடியன் செயவர்த்தன் பல்லைத் தட்டி
உடைத்திடவே புறப்படுவோம் ஈழம் வெல்வோம்! 3

கூற்றுவனைப் படையாக்கிக் கூட்டிச் சென்று
கொடுமுடியை வென்றிட்ட சேரர் செல்வ!
மாற்ருனின் செயலடங்க இமைய வெற்பைச்
செண்டாலே அடித்திட்ட சோழ வீர'
போற்ருதப் பேரினத்தின் பிடரி தள்ளிப்
புகழழித்த பெருவீரன் வழுதி தோழ!
காற்ருகப் படை நடத்தி இலங்கை கொண்ட
பரம்பரையே புறப்படுக ஈழம் வெல்ல! 4

———

குமரி மலர் ஏ. கே. செட்டியார் பிரிவு

குமரி மலர் ஆசிரியரான திரு. ஏ. கே. செட்டியார் 10-9-83 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் சென்னை பொது மருத்துவ மனையில் காலமானுர். 'உலகம் சுற்றும் தமிழன்' என்ற பெயர் பெற்ற திரு. செட்டியார் செட்டிநாட்டில் கோட்டையூரில் 72 ஆண்டுகளுக்கு முன் தோன்றினுர். ஏ. கருப்பஞ் செட்டியார் என்பது இவருடைய முழுப்பெயர். இளமையிலேயே பத்திரிகை களுக்குக் கட்டுரை யெழுதத் தொடங்கினுர். தனவணிகன் என்ற இதழை முதலில் துவங்கினுர். பின் இரங்கூனிலிருந்து ஓராண்டுக்காலம் இதனை வெளியிட்டார்.

மகாத்மா காந்தியைப் பற்றிய டாகுமெண்டரி படம் எடுப் பதற்காக உலக முழுவதும் சுற்றினுர். ஓராண்டுக்காலம் காந்தியடி களுடன் இருந்து அவருடைய பல நிகழ்ச்சிகளைப் படமெடுத்து காந்தி பற்றிய முதல் முழுநீள டாகுமெண்டரியை இந்தியா முழுவதும் திரையிட்டார்.

உலகம் சுற்றிய அனுபவங்களைக்கொண்டு 'உலகம் சுற்றும் தமிழன்' என்ற நூலை வெளியிட்டார். தொடர்ந்து பல பயண நூல்களை எழுதினுர். தமிழில் முதன்முதல் சுவையான பயண நூல்களை எழுதியவர் அவர். 'தற்காலத் தமிழ்ப் பயண இலக்கியத் தின் தந்தை' என அவர் போற்றப்பெறுகின்ருர்.

'குமரி மலர்' என்ற மாதப் பத்திரிகையைத் தொடங்கி 40 ஆண்டுகளாகத் திறம்பட நடத்திவந்தார். பல அரிய செய்திகளைத் தொகுத்து உணவு, பண்பு, கொய்த மலர்கள் என்ற பயனுள்ள நூல்களை உருவாக்கினுர். 'சுதேசமித்திரனில் காந்தியடிகளைப்பற்றி வெளிவந்த செய்திகளைத் திரட்டி, 'புண்ணியவான் காந்தி' என்ற அரிய நூலைக் கொணர்ந்தார்.

இளமையில் திருமணம் செய்துகொண்ட இவர் இல்லறவாழ்க் கையினின்று விரைவில் விலகிக்கொண்டார். எனவே இவர் மக்கள் பேற்றை எய்தவில்லை. உலகநாடுகள் பலவற்றுக்கும் பலமுறை சென்ற இவர் என்றும் எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். காந்திய வாழ்க்கை வாழ்ந்த இவர் எப்போதும் கதருடையே அணிந் தார். பிஜி இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ருத்ரா னந்தா இவருக்கு நெருங்கிய நண்பர். எல்லோருடனும் இனிமை யாகப் பழகுவார். குழந்தைகளிடம் தனி அன்பு செலுத்தியவர். கோட்டையூர் முத்தையா அழகப்பா மேனிலைப் பள்ளியின் ஆட்சிக் குழுத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இவர் மறைவு ஈடு செய்ய முடியாததாகும்.

"நூலைப் படி"

[தெ. முருகசாமி,

முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.]

'படி' என்ற தலைப்பில் பாவேந்தர் பாரதிதாசன் ஒரு பாடலைப் பாடியுள்ளார். இப் பாடலில் 'படி' என்ற சொல்லை 36 முறை சொல்லிப் படிப்படியாகக் குமுகாயத்தை முன்னேற்றப் பார்க்கிறார் கவிஞர். வெறும் குறிப்புகளே போதும் (Notes) என்று கருதி மூல நூலைப் புறக்கணிக்கும் இந்தக் காலத்தில் 'நூலைப் படி' என்றே பாடலைத் தொடங்குகிறார். அதிலும் 'யதார்த்தம்' என்ற போர்வையில் கண்டவாறு வெளியிடும் இக்காலத்து நூல்களை நீக்கி, சங்கத் தமிழ் நூல்களைப் படிக்கத் தூண்டுகிறார் பாவேந்தர்.

சங்க நூல்களில் சாதியில்லை, மதம் இல்லை, சமய வேறுபாடுகளில்லை, அரசியலின் அரைவேக்காட்டுத் தன்மையும் இல்லை. முழுக்க முழுக்க மனிதவாடையோடு மண்வாடை வீசியது. இதனால் இக்காலத் தமிழன் சங்கத் தமிழில் கால் பாவி உலாவ வேண்டுவது மிகமிக இன்றியமையாதது என்பது பாவேந்தர் கருத்தாகும். அங்ஙனம் கால்பாவிப் படிக்குங்கால் ஏனோதானோ என்றில்லாமல் முறைப்படி படிக்கவேண்டும். ஏனெனில் புற்றீசல்போல சில நொடிக்கொன்றாகத் தோன்றி மறையும் இக்கால ஏடுகள் போன்றன்றி என்றும் நிலைத்தலையுடையது சங்க நூல் என்பதால்,

நூலைப்படி—சங்கத்தமிழ்
நூலைப்படி—முறைப்படி
நூலைப்படி

என்று 'முறைப்படி' என்ற எச்சரிக்கை கொடுக்கிறார் கவிஞர்.

அடுத்துப் படிப்பின் இன்றியமையாமை கருதிப் பாவேந்தர் நாள் முழுவதும் படிக்கச் சொல்கிறார். 'காலையெழுந்தவுடன் படிப்பு' என்ற பாரதியின் காலம் மாறிவிட்டது. உலக நாடுகள் யாவும் காலத்தின் அருமைப்பாட்டை உணர்ந்து படிப்பால் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. நம் நாடும் அப்படி முன்னேற வேண்டும். நம்நாடு கல்வியில்லாத களர்நிலமாக ஆகிவிடக்கூடாது என்பதால்,

காலையிற் படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும்படி—நூலைப்படி......

என்று காலத்தின் தேவை கருதிப் படிக்கும் காலத்தைக் கூட்டிக் கணக்கிடுகிறார் பாவேந்தர்.

இன்று நம்நாட்டு இளைஞர்கள் எவ்வளவு காலத்தை வீணடிக்கின்றனர்! ''படிக்கவேண்டிய காலத்தில் படிக்காமலும் முறையாகப் படித்துத் தேர்வெழுதாமலும், அந்தோ! இளமைக் காலத்தைப் பாழாக்கிக் கொள்கின்றார்களே, நாடு என்னுவது?'' என்று நம்நாட்டு இளைஞர்க்காக எந்த ஒரு தலைவராவது சிந்தித்ததுண்டா? குருடும் குருடும் கூடி, குருட்டாட்டம் ஆடுவதைப்போலக் கற்போரும் கற்பிப்போரும் நாட்டை ஏதோ ஒரு வெறுமைக்குள் தள்ளிக்கொண்டிருக்கும் மௌனப் போராட்டத்தின் பலனை நாடு, வெகு விரைவில் அடையப்போகிறது என்பதைப் பொறுப்புள்ள எவரேனும் சிந்தித்ததுண்டா? இங்ஙனம் நாட்டை எதிர்நோக்கியுள்ள வெற்றிடத்தின் இடைவெளியைக் குறைப்பதற்காகவே பாவேந்தர் படிக்கும் காலத்தின் கட்டுப்பாட்டை மிகுதிப்படுத்திக் கூறினர். பெற்றோரும் தம் பிள்ளைகளைப் படி என்று அதட்டிக்கூறும் காலம் மலையேறி விட்டது. ஆசிரியர்கள் நிலை அந்தோ? எனவே, பாவேந்தர்போன்ற கவிஞரால்தான் இங்ஙனம் துணிந்து குரல் கொடுக்க முடியும்.

சரி! கவிஞர் சொல்லியபடி காலை, பகல், மாலை, இரவு படிப்ப தென்றால் வெறும் புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருப்பதா என்றால், அப்படி இல்லை! 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவனடிக் கீழ்' என்று மணிவாசகர் சொன்னதைப்போல, ''பொருள்படும்படி'' புரிந்து படிக்கவேண்டும் என்பது கவிஞர் தரும் காலத்திற்கேற்ற அரிய பெரிய அறிவுரையாகும்.

பாவேந்தர் கூறுவதுபோலச் சங்கத் தமிழை அப்படிப் பொருளுணர்ந்து படிப்பதாகவே கொள்வோம். வாழ்க்கையில் எல்லாவற்றையும் பெற்றுவிட முடியுமா? இக்காலத்தில் வளர்ந்து வரும் தொழிற்கல்வி, விஞ்ஞானக்கல்வி முதலியன வேண்டாவா என யாரும் ஐயுற வேண்டாதவாறு,

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும்அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி?—நூலைப்படி......

என்று வினவுவதில் எல்லாம் அடங்கியுள்ளதைத் தெளியவேண்டும். 'கற்க கசடறக் கற்பவை'—என்பது வள்ளுவம். ஈண்டுக் ''கற்க'' என்ற சொல் ஆலம் வித்தைப் போன்றது. வித்துள் மரமே அடக்கமாவதுபோல அவரவரும் விரும்பியாங்குக் காலத்திற்கேற்ற பல்வேறு கல்வியைக் கற்கவேண்டியது முறையாகும் என்பதையும் அங்ஙனம் எதைக் கற்றாலும் கசடறவும் கற்கவேண்டுவனவும் கற்கவேண்டும் என்பதையும் வள்ளுவர் வற்புறுத்துகிறார் எனத் தெரிகிறது. எனவே

'வள்ளுவர் சொன்னபடி' என்பதில் வாழ்க்கைக் கல்வி முதலாக அனைத்தும் அதனுள் அடக்கம் எனலாம்.

இவ்வுலகம் இன்பியல்தரும் இனிய பூமி, இதில் மனிதன் வாழப் பிறந்தவன், வாழ்விற்கு அறம் வேண்டும், பொருள்வேண்டும், அவற்றால் முறையாக இன்பம் அடையவேண்டும், இம் மூன்றையும் தர வல்லது சங்கநூலே என அடுத்து அடையாளம் காட்டுகிறார் பாவேந்தர்.

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம்படி
சிறந்ததமிழ் நான்மறை
பிறந்ததென்று சொல்லும்படி—நூலைப்படி......

முறையான வாழ்வில் காதலும் வீரமும் இரு கண்களைப்போன்றவை, அவற்றைத் தரவல்லது சங்கநூலே. சாதி, சமயப் பொய் புரட்டுக் கற்பனைகள் இல்லாத காலம் சங்க காலம், அப்படியே அவை இருந்திருந்தாலும் அவற்றை எடுத்துக் கூறிக் கீழ்மைப்படுத்தும் பண்பு இருந்ததில்லை. உள்ளதை உள்ளவாறு சொல்வதாக எண்ணிப் பிறந்த கோல அநாகரிகங்களை அச்சிட்டு உறுதிப்படுத்தும் இக்கால அவலத்திற்கு முற்றிலும் மாறுபட்டது சங்கநூல் என்பது துணிபு.

அகப்பொருள்படி அதன்படி புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்ப் புலமைவரும் என்சொற்படி—நூலைப்படி

சாதிஎன்னும் தாழ்ந்தபடி நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதிஅப்படி தெரிந்துபடி தீமைவந்திடுமே மறுபடி—நூலைப்படி

பொய்யிலே முக்காற்படி புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி
—நூலைப்படி......

இப்படிப் படிப்படியாகக் கூறிவந்த பாவேந்தர் இறுதியாக எளிமை நெறியில் சோம்பேறித் தன்மையில் பழகி மரத்துப்போன இக்காலத்தவர்க்குச் சங்க நூலைப் படிப்பது கடினமாகத்தான் இருக்கும் என ஒப்புக்கொள்கின்றதைப் போல,

"தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி"

என மெதுவாக வற்புறுத்துகிறார். இங்ஙனம் வற்புறுத்தி ஆன்றோர் அடைந்த பலனையும் எடுத்து மொழிகிறார்.

அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி—நூலைப்படி......

வருந்தி ஊன்றிப் படித்தால் அடங்கா இன்பம் வரும் என்பது உடல் நோயைத் தீர்க்க வேண்டிக் கசப்பான மருந்தை உண்டால் பலன் உண்டாகும் என்று கூறும் கண்டிப்பான நல்ல மருத்துவரின் வற் புறுத்தலைப் போன்ற பயன்தரும் செய்தியாகும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனித குலத்தை ஈடேற்ற வேண்டி வள்ளுவர், புத்தர் போன்ற பெருமக்கள் தோன்றிப் பயன் என்ன? சாதிச் சண்டைகள், சமயக் காழ்ப்புகள் இன்றும் தொடர் கின்றன. இன்றைய விஞ்ஞான உலகில் வளரவேண்டிய நம்நாட்டு இளைஞர்கள் வீணே காலத்தைப் போக்கிக்கொண்டு மாயாசால ஆசைகளுக்கு ஆட்பட்டுப் பசையற்ற பயிராகப் பொசுங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இக்கால இளைஞரிற் பலர் காற்றடித்த பக்கமெல்லாம் பறந்து திரியும் இலவம் பஞ்சுபோலப் புரியாத புதிராக வளர்ந்து வரு கிறார்கள். இப் போக்கை ஒழுங்குபடுத்த ஆன்றோர்களும் படித்த வர்களும் அரசியல்வாதிகளும் தம் சிந்தையில் இதை ஓர் அறை கூவலாக ஏற்றுக்கொண்டு நல்ல வாழ்க்கை வழியைச் சுட்டிக் காட்டத் தவறினால் வரலாறு மன்னிக்காது என்பது உண்மை. எனவே எதிலும் நிறைவுகாண முடியாமல் தறிகெட்டோடும் இக் காலக் குமுகாய அமைப்பில் மனித வாழ்வின் வேராக உள்ள கல்வி முறை அமைப்பிலாவது படைவீரர்க்குரியது போன்ற முறையான கட்டமைப்புக் கொண்டுவர முயல்வது அனைவரின் கடமையாகும். அதனால் கல்வி மலர நாடு வாழும், நாடு வாழ நாமும் வாழ்வோம்.

தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கொற்கைத் துறைமுகம் எனப் பெயரிடுக!

பாண்டியனின் பழம்பெருந் தலைநகரான கொற்கை எனுமூரின் அருகிலுள்ள ஏரலில் இயங்கிவரும் கொற்கைத் தமிழ் மன்றத்தார் கோநகர் கொற்கையின் பெயர் விளங்கும் வகையில் தூத்துக்குடித் துறைமுகத்திற்குக் **'கொற்கைத் துறைமுகம்'** எனப் பெயரிடுமாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். பழம்பெருமை வாய்ந்து இன்று குறைந்துபோன கொற்கையின் பழம்பெருமையினை மீட்க அதனைச் சுற்றுலா இடமாக்க அரசு மேற்கொண்டு செயல்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளனர். திருவள்ளுவருக்குக் கற்சிலை யமைக்கும் பணியிலும் மன்றம் ஈடுபட்டுள்ளது.

திருவாசகம், திருக்குறள், சிலப்பதிகாரம், திருமந்திரம் ஆகிய வற்றுக்கு விரிவுரைகள் இம் மன்றத்தாரால் நிகழ்த்தப்பெறுகின்றன. தனித் தமிழில் எழுதவும் பேசவும் மக்களை இம் மன்றம் ஊக்கப் படுத்தி வருகின்றது. வளர்க மன்றப்பணி!

ஐவாய்மான்

[பேராசிரியர் மு. வை. அரவிந்தன்
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி]

"சிங்கத்திற்கு ஐந்து வாய்கள் உண்டு!" என்று யாராவது கூறினால் நாம் நம்புவோமா? நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும், பிற்காலத்தில் இலக்கியம் படைத்த புராணப் புலவர்கள், சிங்கத்திற்கு 'ஐவாய்மான்' என்ற பெயரை இட்டு வழங்கியுள்ளனர்! திருவிளையாடற் புராணம் பாடிய புலவர், சிங்கத்தை 'ஐவாய்மான்' என்று தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

(திருவிளையாடல். மாணிக்கம்-54)

உலகத்தில் எங்குமே இல்லாத—முற்கால இலக்கியங்களில் இடம்பெறாத 'ஐவாய்மான்' எங்கிருந்து வந்து பிற்கால இலக்கியத்தில் புகுந்தது? இந்த வினாவிற்கு விடை காண முயலும் போது, சுவையான செய்திகள் கிடைக்கின்றன.

வடமொழியில், பஞ்சானனம், பஞ்சாசியம் என்ற இரு சொற்கள் சிங்கத்தைக் குறிக்கின்றன. இச் சொற்களுக்கு 'அகன்ற முகம்' என்பது பொருள். அச்சொற்கள் காரணப் பெயராய், அகன்ற முகத்தை உடைய சிங்கத்தைக் குறிக்கின்றன. பிடரிமயிர் அடர்ந்த சிங்கத்தின் முகம், அகன்று காணப்படுவதால் சிங்கத்திற்கு வடமொழியில் பஞ்சானனம் என்றும் பஞ்சாசியம் என்றும் பெயர் ஏற்பட்டது. 'பஞ்ச' என்பதற்கு அகன்ற என்றும், அனனம் என்பதற்கு முகம் என்றும் பொருள்.

பஞ்சானனம் என்ற வடசொல்லின் வரலாறும், பொருளும் பிற்காலத் தமிழ்ப் புலவர்களின் நினைவிற்கு ஏனோ வரவில்லை! அவர்கள் 'பஞ்ச' என்பதற்கு 'ஐந்து' என்றும், 'அனனம்' என்பதற்கு வாய் என்றும் தவறுதலாகப் பொருள்கொண்டு விட்டனர். அதனால், பஞ்சானனம் என்ற சொல்லை, ஐவாய் என்று மொழிபெயர்த்துவிட்டனர். அதனுடன் 'மான்' (விலங்கு என்ற பொருளில்) என்ற சொல்லையும் சேர்த்து சிங்கத்தை 'ஐவாய்மான்' என்ற தொடரால் குறிப்பிட்டனர். தொடக்கத்தில் யாரோ புலவர் ஒருவர் செய்த தவறு, இலக்கியங்களில் இடம்பெற்று, நிகண்டுகளில் ஏறி, அகராதிகளிலும் புகுந்துவிட்டது.

பஞ்ச என்ற வடசொல்லுக்கு, அகன்ற என்ற பொருள் இருப்பதை நினைவில் கொண்டால், திருப்பாவையில் இடம்

பெற்றுள்ள 'மெத்தென்ற பஞ்சசயனம்' (திருப்பாவை-19) என்ற தொடருக்கு நல்ல விளக்கம் கிடைக்கிறது. அத்தொட ருக்கு 'மெத்தென்ற' அகன்ற படுக்கை என்று பொருள் கொள்ளுவது மிகவும் பொருத்தமாய் உள்ளது.

அவ்வாறு பொருள் கொள்ளாமல், அத்தொடருக்கு வெவ்வேறு வகையாக உரையாசிரியர்கள் பொருளும் விளக்கமும் தந்துள்ளனர்.

திவாகர நிகண்டு 'பஞ்ச சயனம்' என்பதற்கு அன்னத் தூவி, பூ, இலவம்பஞ்சு, கோரை, மயிர் இவற்ருல் அமைந்த 'ஐவகைப் படுக்கை' என்று விளக்கம் கூறுகின்றது. திருப்பாவை வியாக்கியானம், பின்வருமாறு விளக்கம் தருகின்றது :

சொற்பொருள் : மெத்தென்று இருக்குமதாயும், அழகு குளிர்த்தி மென்மை பரிமளம் வெண்மை என்னும் ஐந்து குணங்களை உடையதுமான படுக்கை.

விளக்கம் : மென்மை குளிர்ச்சி நறுமணம் வெண்மை விரிவு என்கிற ஐவகைச் சிறப்புகள் பொருந்திய படுக்கைக்கு, 'பஞ்ச சயனம்' என்று பெயர்.

நயம் : இந்த ஐவகையில் மெத்தென்றிருத்தலும் சேர்ந் திருக்கச் செய்தேயும், தனிப்பட 'மெத்தென்ற' என்ற விசேஷண மிட்டது அது முக்கியமாய் இருக்கும்படியைக் காட்டுதற்காம்.

———

வேண்டும்

[நல்லார்க்கினியன்]

நாடும் மொழியும் நலமுற வேண்டின்
நாளும் புதிய சிந்தனை வேண்டும்
பாழும் பழைய எண்ணங்க ளெல்லாம்
பகலவன் பட்ட பனியென மாய
பயனிலாப் பேச்சும் பயன்தரா எழுத்தும்
படிப்படி யாக மறைதல் வேண்டும்
விளங்காப் பொருளியல் விளம்பர அரசியல்
வெற்ருர வாரம் வீண்பொரு ளழிவு
எற்றிப் பிழைக்கும் ஏதிலார் ஆட்சி
இத்தனை யும்இனி இத்தரை மீதினில்
இருந்திடல் முறையோ எனுமோர் எழுச்சி
இளையோர் நெஞ்சில் எழுந்திடல் வேண்டும்.

செய்திகள்

முதுபெரும் புலவர் மே. வி. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் 88ஆம் பிறந்தநாள் விழா

புரசை, சுந்தரர் தமிழ்க் கல்லூரித் தலைவரும், இலக்கணத்தாத்தா எனப் போற்றப்பெறுபவருமான முதுபெரும் புலவர் மே. வீ. வேணு கோபாலப்பிள்ளை அவர்களின் 88ஆம் பிறந்தநாள் விழா 31-8-83 புதன் கிழமை மாலை, புரசை கங்காதரேசுவரர் கோயில் தெரு விலுள்ள மாநகராட்சி உயர் நிலைப்பள்ளியில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. பைந்தமிழ்ப்பாவலர், பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர் எம். ஏ., அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்ருர். பேராசிரியர் தி. வ. மெய்கண்டார், தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் த. பெரியாண்டவன், எம். ஏ., பல்கலைக் கழக மெய்ப் பொருளியல் துறை முனைவர் வை. இரத்தினசபாபதி எம். ஏ. ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். செயலாளர் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

இலக்கியத்திற்குப் பரிசு ஓர் இலக்க ரூபா!

ஒவ்வோர் ஆண்டும் தமிழ் ஆண்டுப் பிறப்பன்று தமிழ்ப் படைப் பிலக்கியத்திற்கு ஒரு நூருயிர வெண்பொற் காசுகளைப் பரிசாக வழங்குவதென்று அண்மையில் தஞ்சையில் கூடிய தமிழ்ப் பல்கலைக் கழக ஆளுநர்குழு முடிவு செய்துள்ளது. இப் போட்டி யில் கடல் கடந்து வாழும் தமிழ் எழுத்தாளர்களும் கலந்துகொள்ள லாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் வகுப்பு

சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள கோகலே மண்ட பத்தில் ஒய். எம். ஐ. ஏ., தமிழ்ப் பேரவையின் சார்பில் 31-5-83 முதல் திருவாளர் கல்லை தே. கண்ணன் அவர்கள், திங்கட் கிழமை தோறும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை திருக்குறள் வகுப்பினை நடத்துகிருர். அன்பர்கள் கேட்டுப் பயன் பெறுவார்களாக.

தமிழ் ஆய்வு மன்றத் தீர்மானம்

சென்னை மகாகவி பாரதிநகர் தமிழ் ஆய்வு மன்றத்தின் பொதுக் குழுக் கூட்டம் 6-8-83ல் நடைபெற்றது. அதுகாலை, இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்தும, துயருற்ற இலங்கைத் தமிழர்க்கு மறுவாழ்வளிக்கவும், இன்னல்களைக் களையவும் மைய அரசு மின்னல்வேக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஓதுவார் மூர்த்திகள் வேண்டுதல் கூட்டம்

தமிழ்நாடு தேவார ஓதுவார் மூர்த்திகள் சங்கம் 28-8-83 மாலை, சைதை அருள்மிகு காரணீசுவரர் திருக்கோயிலில், கலைமா

மணி சைதை தேவாரம் த. நடராசன் அவர்கள் தலைமையில், இலங்கைத்தமிழர் இன்னல் களைய இறைவனை வேண்டி வழிபாட்டு ஊர்வலமும் வேண்டுதல் கூட்டமும் நடத்தினர்.

நீலாம்பிகையார் தட்டச்சுப் பயிற்சி நிலையம், நெல்லை

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் திருநெல்வேலியில் நடைபெற்றுவரும் நீலாம்பிகையார் தட்டச்சுப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று, மேத் திங்கள் 25ஆம் நாள் நடைபெற்ற தொழில் நுட்பத் தேர்வுக்குச் சென்ற **18 மாணவிகளில் 13 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்**. அவர்களுள் முதல் நிலையில் தேறியவர்கள் நால்வர். இரண்டாம் நிலையில் தேறியவர்கள் ஒன்பதின்மர்.

நெல்லை, தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் இருபத்து மூன்றும் ஆண்டுவிழா

திருநெல்வேலி தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் இருபத்து மூன்றும் ஆண்டு விழாவும், திரு. வி. க. ஆய்வரங்கமும் 28-8-83 ஞாயிறு காலை முதல் மாலை முடியப் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மாடிக் கட்டிடத்தில் நடைபெற்றது. கழகத்தலைவர் பேராசிரியர் வளன் அரசு அனைவரையும் வரவேற்றார். கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் பேராசிரியர் கோ. சங்கர ராசுலு அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் அறிஞர் கோ. விசய வேணுகோபால் அவர்கள் தொடக்கவுரை யாற்றித் திரு. வி. க. ஆய்வு நூலை வெளியிட்டார்கள். பிற்பகலில் ஆய்வரங்கம் நடை பேற்றது. அதில் அறிஞர் பலர் உரையாற்றினர். மாலையில் பேராசிரியர் வளன் அரசு அவர்கள் தலைமையில் வழக்காடுமன்றம் நடைபெற்றது. செல்வன் தே. வருகிசு நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது.

திரு. நா. நீலகண்டன் மறைவு

பெங்களூர்த்தமிழ்ச் சங்கத் தலைவரும் அனைத்திந்திய தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைத்துப் பேரவை நிறுவியவருமான திரு. நா. நீலகண்டன் அவர்கள் 21-8-'83-ல் பெங்களூர் தூயயோவான் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தமது 47ஆம் அகவையில் காலமானார்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். மறைந்த இத் தமிழன்பரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித் துக் கொள்கிறோம்.

கவிஞர் அ. கு. ஆதித்தனார் மறைவு

புகழ்பெற்ற கவிஞரும், சிறந்த நூலாசிரியரும். பன்மொழிப் புலவரு மான கவிஞர் அ. கு. ஆதித்தனார் அவர்கள் 3-9-83இல் காலமா னார்கள் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். மறைந்த கவிஞர் அவர்களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித் துக் கொள்ளுகிறோம்.

மல்லிகா—மணி திருமண விழா

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சென்னைக் கிளை நிலைய முன்னாள் உதவிக் கணக்காளரும், செந்தமிழ்ச் செல்வி வாழ்நாள் கையொப்ப உறுப்பினரும், சென்னை கோயல் குரூப் தலைமைக் கணக்காளருமாகிய திரு அ. ஆறுமுகம் அவர்களின் அருமை மகள் மல்லிகாவிற்கும் நுங்கம்பாக்கம் ஆறுமுகம் அவர்களின் இளவல் மணி என்ற சிவசுப்பிரமணியத்திற்கும் 28-8-83-ல் நுங்கம்பாக்கம் எஸ். ஏ. பி. திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

கழக ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி எம். ஏ., பி. லிப். அவர்கள், கழகக் கிளை மேலாளர் ஆ. சுப்பையா அவர்கள், மற்றும் கழக அலுவலர்கள், நங்கநல்லூர் ரங்கா திரையரங்க உரிமையாளர்கள் நாகரத்தினம், பழனி கோயல் குரூப் கன்யாலால் ஹிராப்பூர் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் ரீஜினல் பொதுமேலாளர், எம். ஆர். நாராயணசாமி மற்றும் திரளான உறவினர்களும் நண்பர்களும் வந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

செந்தமிழ்ச் செல்வியின் சார்பிலும் மணமக்களுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். —ஆ-ர்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ௫௭, ௫௫சஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
,, A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
,, விசாக நம்பி ,,	5	00
,, முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் (மகள் மல்லிகா திருமண நன்கொடை)	11	00

திருவிளையாடற் புராணச் சொற்பொழிவு

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில், பல்லாவரம் கலைமன்றத்தில் (34, சாவடித் தெரு) பிரசங்க சண்ட மாருத இரத்தினாகரம் திரு. ஏ டி. ஈசுவர் அவர்கள் ஆற்றிவரும் திருவிளையாடற் சொற்பொழிவு 28-8-'83 முதல் ஞாயிறு தோறும் மாலை 6 மணி முதல் 7-30 மணிவரை நடைபெறும். அன்பர்கள் வருகை புரிந்து பயன் பெறுவார்களாக.

இரா. முத்துக்குமாரசாமி எம். ஏ., பி. லிப்.
செயலர், தென்னிந்திய தமிழ்ச் சங்கம்.

மதிப்புரை

தமிழர் எண்ணங்கள்

[தொகுப்பாசிரியர்: டாக்டர் க. காந்தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி. டி. டி. ஐ., தரமணி சென்னை-600113. பக்கங்கள் xxxii+315; விலை: ரூ 16/-]

பண்டைத் தமிழகம் மண்வளத்தால் மட்டுமன்றி, மாந்தரின் மன வளத்தாலும் சிறந்திருந்தது. தமிழ்ப் புலவர்கள் பிற எவ்வளம் பெற்றிராவிடினும் எண்ணத்தால் பெருவளம் பெற்றுத் திகழ்ந்தனர். கிரேக்கமும் தமிழகமும் சிந்தனை வளம் நிரம்பிய சீரிய நாடுகளாய் விளங்கின. அதனால் இவ்விரு நாடுகளும் இன்றளவும் இலக்கிய வளம் பெற்றுத் திகழ்கின்றன. தமிழரின் எண்ண ஆற்றல்கள் தாம் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்க ளாக மலர்ந்தன. அந்நூல்களில் வரும் சீரிய கருத்துகளைத் "தமிழர் எண்ணங்கள்" என்னுந் தலைப்பில் அகர வரிசையில் தொகுத்துக் கொடுக்கிறார் இந்நூலாசிரியர். சுருங்கச் சொல்லவேண்டுமாயின், சங்க இலக்கியங்களை முழுமையாகப் பயில ஆற்றுப்படுத்தும் வகை யில் அமைந்துள்ள சங்கநூல் திரட்டே இஃது எனில் அமையும். தமிழர் எண்ணங்கள் என்னும் ஆராய்ச்சி முன்னுரை பயனுள்ள ஆராய்ச்சிக் கட்டுரையாகத் திகழ்கிறது.

வள்ளலார் வாய்மொழி

[ஆசிரியர்: சீனி. திருநாவுக்கரசு (தஞ்சைவாணன்), கலைவாணி புத்தகாலயம், 69, முத்தையா முதலி தெரு, வேளாள தேனும் பேட்டை, சென்னை-86, ரூ. 6/-]

வள்ளலாரைப்பற்றி எத்துணையோ நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனல் வள்ளலார் யார்? அவர் உள்ளம் எத்தகையது? அவர்தம் அறிவுரைகள் யாவை? இவ்வுலகில்-இவ்வாழ்வில் மக்கள் இன்புற்று வாழ அவர் காட்டிய வழிவகைகள் யாவை? என்பனபற்றியெல்லாம் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூல் ஒன்று உளதெனின் அது சீனி. திருநாவுக்கரசர் தொகுத்துள்ள 'வள்ளலார் வாய்மொழி' எனில், மிகையன்று. வள்ளலாரைப்பற்றிய சொற்பொழிவாற்ற விழை வார்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும். வள்ளலாரைப்பற்றிப் பல திருப்பங்களினின்று செய்திகளை எடுத்துக் கூறும் இந்நூலாசிரியரின் திறம் வியந்து பாராட்டற்குரியது.

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?

[ஆசிரியர்: மறை. திருநாவுக்கரசு, குன்றவாணன் பதிப்பகம், பள்ளி பாளையம், ஈரோடு-638006, ரூ. 3/-]

இந்தியால் தமிழ் கெடும் என்பது நாடறிந்த உண்மை. அதனல் தான் அன்று முதல் இன்றுவரை இந்தித்திணிப்பைத் தமிழகம்

எதிர்த்து வருகிறது. எனினும் இந்திக்குச் சலுகை தந்திடும் சிலரும் உளர். அப்படிப்பட்டவர்களுக்குத் தெளிவுண்டாக்கும் வகையில் அமைந்துள்ளது இவ் வெளியீடு. இது மறை. திருநாவுக்கரசு அவர்கள் இந்தி எதிர்ப்புப் போர்க் காலத்தில் ஆற்றிய தமிழ்ப் பாதுகாப்புச் சொற்பொழிவுகளின் சாரமாகும். "இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?" என்று தமிழ்க் காப்பாளர்களை நோக்கி எதிர்வினா விடுப்போர்க்கு "இதோ, இவ்வாறுதான் கெடும்!" என்று பதிலிறுக்கும் வகையில் அமைந்துள்ளது நாவுக்கரசரின் சொற்பொழிவு. இந்தி வெறியர்கள் படித்துத் தெளிவு பெறுவார்களாக!

சமயக் கட்டுரை மாலை

[ஆசிரியர்: டாக்டர் வெ. சு. அழகப்பன், எம். ஓ. எல்., எம். லிட்., பி. எச்டி.

கண்ணம்மை பதிப்பகம், 8. ப. அ. லெ. தெரு, காரைக்குடி, 623001, விலை: ரூ. 8/-]

சமயப்பற்று மிக்குடைய டாக்டர் வெ. சு. அழகப்பன் அவர்கள் பல்வேறு காலங்களில் எழுதிப் பல மலர்களில் இடம்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே இச் 'சமயக் கட்டுரை மாலை' யாக வெளிவந்துள்ளது. புறநானூற்றுச் சமயம், புறநானூற்றில் இதிகாச புராணங்கள், பாண்டியர் வளர்த்த சைவம், சைவ சமய மறுமலர்ச்சியில் நகரத்தார், மாணிக்கவாசகரின் வழி, நாச்சியார் பாடல் திறம், தேவி புகழ், பழநிமலைப் பயண வரலாறு, பாரதி காட்டும் விநாயகர் என்பன அக்கட்டுரைகள். அனைத்தும் படித்தறிய வேண்டிய பயனும் சுவையுமுள்ள கட்டுரைகள். தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வாழ்த்துரையுடன்கூடிய நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி

[ஆசிரியர்: தில்லைவனம், எம். ஏ., வெளியீட்டாளர்: திருமதி அனந்தராமன், 7/10, மேற்கு வீதி, பாகூர், 607402-புதுச்சேரி, புதுவை மாநிலம். விலை: ரூ. 10/-]

புதுவை மாநிலம் தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும், அது பிரஞ்சுக்காரர் ஆட்சியில் இருந்தமையால், அங்கு வாழ்ந்த தமிழ்மக்கட்கு சில நல்வாய்ப்புகள் கிட்டின. அறிவுத் துறையிலும் அரசியல் துறையிலும் சான்றோர்கள் சிலரைத் தோற்றுவிக்கவும் வளர்க்கவும் அவ் வாய்ப்புகள் பயன்பட்டன. 'புதுவை' என்றாலே சில 'புதுமைகள்' அங்கு நிகழ்ந்தமை நினைவுக்கு வரும். அவற்றை விரிக்கின் பெருகும். தமிழகத்தின் வரலாற்றினை எழுதிய அறிஞர்கள் புதுவையைப்பற்றி அத்துணைச் சிறப்பாக ஏதும் குறிப்பிடவில்லை. இந்நூலாசிரியர் திரு. தில்லைவனம், தமது நுண்மாண் நுழைபுலத்தாலும் ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சித் திறத்தாலும் எழுதிய ஒரு சிறந்த வரலாற்று நூலே "புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி" என்னும் இந்நூலாகும் எனில் மிகையன்று. ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது, வரவேற்கத்தக்கது. தமிழன்பர்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகள் இந்நூலுள் நிரம்ப உள்ளன.

வள்ளுவர் வழி (திங்கள் இதழ்)

[ஆசிரியர் : கல்லை. தே. கண்ணன், 3, தேசி காலனி, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 600012. தனி இதழ் ரூ. 1/- ஆண்டுக் கட்டணம் ரூ 10/-]

கல்லை திரு. தே. கண்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்திருக்கும் "வள்ளுவர் வழி" என்னும் திங்களிதழ் வரப் பெற்ருேம். மக்களினம் ஒன்றுபட்டு வாழ வள்ளுவர் காட்டிய வழியே சிறந்ததெனக் கண்டு, அவர் தம் குறள்நெறியைப் பரப்புதலே நோக்கமாகக் கொண்டு இவ்விதழ் நடைபோடும் எனத் தெரிகிறது. தமிழ்மக்களின் அறிவும் ஆற்றலும் வெற்ருரவாரத்திலும் கவர்ச்சியிலும் சிக்கிச் சீரழியும் இந்நாளில் இந்த "வள்ளுவர் வழி" யாகிலும் நல்வழி காட்டும் என எதிர்பார்க்கிருேம்.

திருமந்திர உபதேசம்-உரை

[ஆசிரியர் : புலவர் பா. வரதராசன், எம். ஏ., 40, பெரிய மணியக்காரத் தெரு, செங்கற்பட்டு, ரூ. 1-50]

திருமூலர் அருளிய திருமந்திர நூலுக்கு உரை காண்பதும் விளக்கந்தருவதும் எல்லாராலும் இயல்வதன்று. இந்நிலையில் திருமந்திர உபதேசப் பகுதிக்குப் புலவர் வரதராசன் அவர்கள் எளிய இனிய தெளிவுரை யொன்றனை எழுதியிருப்பது பெரிதும் போற்றுதற்குரிய தொண்டாகும். ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

நாருண்டு கண்ட பாரதி

[ஆசிரியர் : 'எழிலமுதன்' 43, சிவன்கோயில் தெரு, திருவைகுண்டம். ரூ. 1-75]

பாரதியாரைப்பற்றிப் பலர் பல திருப்பங்களினின்று ஆராய்வது போல், இந் நூலாசிரியரும் ஆராய்ந்து, அவருடைய முற்போக்குக் கருத்துகளை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிருர். அதற்குப் பல தமிழ் இலங்கியங்களினின்று மேற்கோள்கள் காட்டியுள்ளார். பாரதியார்பற்றி நாட்டுத் தலைவர்கள் பலர் கொண்டிருந்த கருத்துகளையும் திரட்டிக் காட்டுகிருர்.

வரப்பெற்ருேம்

திருக்குறளுக்கு ஓரே குரல் (நான்கு மொழிகளில்) 1. அறம்.

ஆசிரியர் இரா. வெ. அழகன், கல்வியூர், தரணம்பேட்டை, குடியேற்றம், வ. ஆ. ரூ. 1/-]

கோமதியே குடும்ப விளக்கு

"வடலூர் அடிப்பொடி" புலவர் அடியன் மணிவாசகன், வள்ளலார் பொது நெறி இல்லம், 6 அஞ்சலகத்தெரு, திருவைகுந்தம், 628601, விலை : 80 காசு.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம், சாலை, சென்னை, அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப்.

பதிவு எண் : 4899 Sep 1983

அப்பர் அச்சகம். சென்னை-108.